# உதயன்

சுடர் : 36 கதிர் : 242 | புதன்கிழமை | ஆடி 12 ஆம் நாள் 28 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## கிணற்றுக்குள் இருந்து தம்பதி சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஜூலை 28
மல்லாவிப் பகுதியில் கிணற்றுக்குள் இருந்து கணவன், மனைவி இருவரும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். அதே இத்தைச் சேர்ந்த 19

## கொரோனாவால் யாழில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28
யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தார். யாழ்ப்பாணம் போதனா 19




## யாழ்ப்பாணத்தில் நாளை தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூலை 28
யாழ்ப்பாணத்தில் நாளை 29ஆம் திகதி முதல் தடுப்பூசி ஏற்றப் படவுள்ளது. சீன அரசு நன்கொடையாக வழங்கிய 16 லட்சம் தடுப்பூசிகளில் வடக்கு மாகாணத்துக்கு 19

பருத்தித்துறையில்

## அன்டிஜென் சோதனை: 11 பேருக்குத் தொற்று!

யாழ்ப்பாணம், ஜூலை 28
பருத்தித்துறை நகர் உள்ளிட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தல் 19

# அமெ. தடைப்பட்டியலில் இலங்கை உள்ளடக்கம்!

சீனத் தூதரகம் 'ருவிட்'

கொழும்பு, ஜூலை 28
அமெரிக்காவின் தடைகள் விதிக்கும் நாடுகள் பட்டியலில் இலங்கையும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. 19



## உலகில் பெரிய நீல இரத்தினக் கல் இரத்தினபுரியில் கண்டுபிடிப்பு!

கொழும்பு, ஜூலை 28
இலங்கையிலுள்ள ஒரு வீட்டுத் தோட்டத்தில் உல 19

## வட்டுவாகல் பகுதியில் நாளை காணி அபகரிப்பு

முறியடிப்பதற்கு ஒன்றிணையுங்கள்
சிவாஜிலிங்கம் பகிரங்க அழைப்பு

முல்லைத்தீவு, ஜூலை 28
வட்டுவாகலில் நாளை காணி அபகரிக்க இராணுவத்தால் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதை எதிர்த்து மேற்படி அபக 19

கொத்தலாவல சட்டவரைபை எதிர்த்து

## யாழ். பல்கலை ஆசிரியர் சங்கத்தால் இன்று அடையாள வேலை நிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஜூலை 28
கொத்தலாவல பல்கலைக் கழக சட்டமூலத்தை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் இன்று புதன்கிழமை அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது. அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் வேண்டுகோளின்படி ஏனைய ஆசிரியர் சங்கங்களுடன் 19

## தீயில் எரிந்த பெண் இறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28
கடந்த 22ஆம் திகதி தீயில் எரிந்த குடும்பப் பெண் 19

## மயங்கி விழுந்த முதியவர் சாவு!

கொடிகாமம், ஜூலை 28
மாடுமேய்த்துக் கொண 16



## ஹிஷாலினிக்கு நீதிவேண்டி யாழில் நேற்று போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 28
சிறுமி ஹிஷாலினியின் இறப்புக்கு நீதி கோரி யாழ் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் 19

## அதிபர், ஆசிரியர்களின் கோரிக்கைக்குத் தீர்வு!

மஹிந்த வாக்குறுதி

கொழும்பு, ஜூலை 28
அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட கோரிக்கைகளுக்கான இறுதி 19

## தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்படாது

ஸ்டாலின் விடாப்பிடி 19

## விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

பளை ஜூலை 28
மின்கம்பத்தில் மோட்டார் சைக்கிள் மோதி காயமடைந்த 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தடுப்பூசி மாத்திரமே பாதுகாப்புக் கவசம்!

## அரசு மீண்டும் அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூலை 28

கொரோனாத் தொற்றால் தற்போது உயிரிழப்பவர்களில் 90 வீதமானோர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்களாவர். தடுப்பூசியை பெறுவதற்கு தகுதியான அனைவரும் அதனை பெற்றுக்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான ரமேஸ் பத்திரன தெரிவித்தார்.



அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது நாட்டில் தற்போது அடையாளம் காணப்படும் தொற்றாளர்களில் 30 வீதமானோருக்கு டெல்டா தொற்று இருக்கக்கூடும் என்று சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகத்தால் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது அடையாளம் காணப்படும் தொற்றாளர்களில் 30 வீதமானோருக்கு டெல்டா தொற்று இருக்கலாம் என்ற ஊகத்தையே அவர் வெளியிட்டார். எந்தவொரு ஆய்விலும் அது உறுதிப்படுத்தப்படவில்லை. இவ்வாறானதொரு அபாய நிலை ஏற்படக்கூடும், எனவே, அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும் என்ற தகவலையே அதன் ஊடாக அவர் வழங்கியுள்ளார்.

நாட்டில் தற்போது இடம்பெறும் கொரோனா உயிரிழப்புக்களில் 90 வீதமானோர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்கள். தடுப்பூசியை பெற்றுக்கொண்டால், கொரோனா தொற்றினாலும் உயிராபத்து ஏற்படாது. எனவேதான் தடுப்பூசி திட்டத்தை அரசு விரைவாக முன்னெடுத்து வருகின்றது. இன்னும் 2 மாதங்களுக்குள் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 2ஆவது டோஸையும் வழங்கி முடிக்கக் கூடியதாக இருக்கும். இதுவரை தடுப்பூசியை பெறாதவர்கள் தமது பகுதிக்கு பொறுப்பான சுகாதார அதிகாரிகளை தொடர்புகொண்டு அதனை பெற்றுக் கொள்ளுங்கள். வயது வந்தவர்கள் மற்றும் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளுக்கே சென்று தடுப்பூசி ஏற்றப்படுகின்றது - என்றார். (ஓ.44)





## மன்னார் மாவட்டத்தில்

# சுற்றுலாவிகளைக் கவரும் பல வேலைத்திட்டங்கள்

மன்னார், ஜூலை 28

மன்னாரில் சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சர்வதேச கண்டல் தாவர தினத்தை முன்னிட்டு மன்னார் தள்ளாடிப் பகுதியில் கண்டல் தாவரங்கள் நேற்று நடுகை செய்யப்பட்டன. மன்னார் மாவட்ட செயலர் திருமதி ஸ்ரான்லி டி மெல் கண்டல் தாவரங்களை நடுகை செய்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இதேவேளை மன்னாருக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்காக குறித்த இடத்தில் உயர் கோபுரம் ஒன்று அமைப்பதற்கான அடிக்கல்லும் நேற்று நடுகை செய்யப்பட்டது. (ஐ-213)

# சட்டம் இயற்றுபவர்கள் வீடுகளிலேயே தொடர்ச்சியாக பெண்கள் வன்முறை

## கிளி. மாவட்ட பெண்கள் செயற்பாட்டாளர் உசாநந்தினி தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 28

"சட்டங்களை இயற்றுபவர்கள் வீடுகளிலேயே தொடர்ச்சியாக நடந்தேறுகின்றன பெண்கள் மீதான வன்முறை. இந்த நிலைமை தொடருமானால் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியே" என்று கிளிநொச்சி மாவட்ட பெண்கள் செயற்பாட்டாளர் சுரேஸ்குமார் உசாநந்தினி தெரிவித்துள்ளார்.




கிளிநொச்சி ஊடக மையத்தில் சிறுவர், பெண்கள் பாதுகாப்பு மற்றும் ஹிஷாலினியின் உயிரிழப்புக்கு நீதி பெற்றுத்தருமாறு கோரி நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு, தொழில் கட்டளை சட்டம் மற்றும் கட்டாய கல்வி போன்ற சட்டங்கள் இருந்தும் அவை உறங்கிக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான சட்டங்கள் ஏன் மௌனித்திருக்கின்றது. அடிக்கடி பெண்கள் வன்முறைக்கு உள்ளாகின்றார்கள். என்ன காரணங்களால் இந்த சட்டங்கள் மௌனித்திருக்கின்றது? அவை மௌனித்திருப்பதற்கு காரணம் அரசியல் பலமா அல்லது பண பலமா? உண்மையில் அதிகாரத்தில் இருப்பவர்களும், அரசியலில் ஈடுபடுபவர்களும் பணபலம் படைத்தவர்களுக்கும் உள்ள சட்டங்கள் வேறா?

குற்றவாளிகள் பலர் தப்பிக்கின்றனர். நிரபராதிகள் பலர் சிறைகளிலே இருக்கின்றார்கள். இதற்கான நீதி என்ன? பாதிக்கப்படும் ஒவ்வொரு பெண்களுக்கான நீதியையும் அரசு தர வேண்டும்.

சிறுமியின் உயிரிழப்பு உள்ளிட்ட விடயங்களுக்கு அரசு நீதியை வழங்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீட்டில் இடம்பெற்றுள்ள இந்தக் கொலையானது, பரிதாபத்துக்குரிய விடயமாக இருக்கின்றது.

ஏனெனில், சட்டங்களை இயற்றுபவர்கள் வீடுகளிலேயே இவ்வாறான நிலை ஏற்படின், நாங்கள் எப்படி வாழ்க்கையை நடத்தப்போகின்றோம் என்ற விடயம் அச்சத்தை ஏற்படுத்துகின்றது - என்றார். (ஐ-6)

# ஹிஷாலினியின் மௌனத்தால் அவரது உயிரிழப்பில் மர்மம்

## கிளி. மாவட்ட பெண்கள் வாழ்வுரிமைச்சங்க இணைப்பாளர்

கிளிநொச்சி, ஜூலை 28

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் வீட்டில் தான் பாதிக்கப்பட்டமை தொடர்பில் ஆரம்பத்திலேயே வெளிப்படுத்தி இருந்தால் ஹிஷாலினியின் உயிரிழப்பு மர்மமானதாக இருந்திருக்காது என்று கிளிநொச்சி மாவட்ட பெண்கள் வாழ்வுரிமைச் சங்க இணைப்பாளர் வாசுகி வல்லிபுரம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஊடக அமையத்தில் பெண்கள், சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான ஊடக சந்திப்பு நேற்று நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைக்கு ஊடகங்களில் 15 வயது சிறுமி கோழிக்கூட்டுக்குள் அடைத்து வைத்து தந்தையால் கொடுமைப்படுத்தல், தந்தையால் 14 மற்றும் 12 வயது சிறுமிகள் கர்ப்பம், தந்தையால் சிறுமிக்கு பாலியல் தொந்தரவு போன்ற செய்திகளே வெளிவருகின்றன.

இந்தச் செய்திகளை கேட்கின்றபொழுது உண்மையாகவே மனம் வேதனைப்படுகின்றது. உருவத்திலே மனிதர்களாக இருக்கும் இவ்வானவர்கள் குணத்திலே மிருகங்களாக இருப்பதாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

வித்தியாவின் கொலைக்கு முன்னர் இடம்பெற்ற பல சம்பவங்களும், ஹிஷாலினியின் கொலைக்கு முன்னர் இடம்பெற்ற பல சம்பவங்களும் வெளிக் கொணரப்பட்டிருந்தால் இரு கொலைகளும் நிறுத்தப்பட்டிருக்கும். கொலைகளுக்கு முன்னரான பகுதிகள் வெளிக்கொண்டுவரப் படுவதில்லை.

எனவே இவ்வாறான பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றபொழுது முறையிடுங்கள், எங்களைப்போன்று பல மாவட்டங்களில் பெண்கள் அமைப்புக்கள், செயற்பாட்டு குழுக்கள் கிராமங்களிலும், மாவட்டங்களிலும் செயற்பட்டு வருகின்றன.

அவ்வாறான முறைப்பாட்டின் ஊடாக இரகசியமான முறையில் குற்றவாளியை அடையாளம் கண்டு அவருக்கான தண்டனையை பெற்றுக்கொடுப்பதுடன், இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது தடுக்க முடியும் - என்றார். (ஐ-113.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி மாவட்டத்தில்
# 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இன்று முதல் கொவிட் தடுப்பூசி

**கிளிநொச்சி, ஜூலை 28**
**கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட்- 19 தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் இன்று புதன்கிழமை முதல் முன்னெடுக்கப்பட வுள்ளன.**

எனவே கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தவறாது தங்களுக்குரிய தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுங்கள் என்று கிளிநொச்சி பிராந்திய தொற்று நோயியலாளர் மருத்துவர் நிமால் அருமைநாதன் அறிவித்துள்ளார். ஊடகங்களுக்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கல்வித்துறை ஊழியர்கள், போக்குவரத்து துறை ஊழியர்கள், முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோரில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களும் தங்களுக்கு அருகில் உள்ள தடுப்பூசி செலுத்தும் நிலையங்களுக்குச் சென்று தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 9 தடுப்பூசி நிலையங்கள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன, கிளிநொச்சி மத்திய கல்லூரி, அக்கராயன் மகா வித்தியாலயம், வட்டக்கச்சி மத்திய கல்லூரி, உருத்திரபுரம் மருத்துவமனை, தர்மபுரம் மத்திய கல்லூரி, முழங்காவில் மருத்துவமனை, பூநகரி மருத்துவமனை,வேரவில் மருத்துவமனை மற்றும் பளை மத்திய கல்லூரி ஆகிய நிலையங்களில் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

30 வயதுக்கு மேற்பட்டவர்கள் தங்களுக்கு அருகில் உள்ள நிலையங்களுக்குச் சென்று தடுப்பூசியை பெறுக்கொள்ளவும்.மேலும் மாற்றுவலுவுள்ளோர், கடுமையான மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், படுக்கை நோயாளிகள், முதியோர் இல்லத்தில் உள்ளவர்கள் ஆகியோருக்கு எமது நடமாடும் சேவை பிரிவினர் அவர்களின் இருப்பிடம் சென்று தடுப்பூசி வழங்குவார்கள்.

எனவே இந்த தேவையுள்ளவர்கள் 021 2285933 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முற்பதிவு செய்யவும்.


இதேவேளை 12 வாரங்களுக்கு அதிகமான கர்ப்பிணி தாய்மார்கள் இந்த நிலையங்களுக்குச் சென்று தங்களுக்குரிய தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும் -என்றார். (ஐ-214)

## அமெரிக்க பாணியில் ஜனாதிபதி செயலகம்

கொழும்பு,ஜூலை 28
அமெரிக்காவின் வெள்ளை மாளிகை பாணியில், வாராந்த பத்திரிகையாளர் சந்திப்புகளை இலங்கை ஜனாதிபதி செயலகம் நடத்தவுள்ளது.

இதற்காக கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ஊடக மையம் நிறுவப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செய்தித் தொடர்பாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க, அமெரிக்காவில் வெள்ளை மாளிகை நடத்தும் வாராந்த பத்திரிகையாளர் சந்திப்புகளின் அடிப்படையில் புதிய ஊடக அமையம் உருவாக்கப்பட்டுள்ளது. இது ஊடகவியலாளர்கள் மற்றும் ஜனாதிபதி உட்பட அரச அதிகாரிகளுடன் நேரடியாகவோ அல்லது ஒன்லைன் ஊடாகவோ தொடர்பு கொள்ள வாய்ப்பளிக்கும்- என்றார். (ஓ.4,சி)





கோப்பாய் பிரதேசத்தில் வதியும் மாற்றுத் திறனாளிகள் 30 பேருக்கு தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. சாவகச்சேரி நண்பர்கள் அமைப்பினர் (1993 க.பொ.த உயர்தரப் பிரிவு ) மற்றும் நலன்விரும்பிகள் இணைந்து இந்த உதவியை வழங்கினர். (ஐ-9)

## கோத்தாவின் ஆட்சியில் ரிஷாத்துக்கு தண்டனை

கொழும்பு,ஜூலை 28
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆட்சியில் இருக்கும்போதே முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு தண்டனை வழங்கப்படும் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல், சதொச மோசடி மற்றும் மலையகச் சிறுமி உயிரிழப்பு மீதான குற்றச்சாட்டுகளுக்காக, அவருக்கு வழங்கக்கூடிய அதிகபட்ச தண்டனை இந்த அரசின் ஆட்சிக் காலத்திலேயே வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.4)

## 64 பேருக்கு நேற்று கொவிட் பரிசோதனை

சாவகச்சேரி,ஜூலை 28
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் நேற்று 64 பேருக்கு கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களின் பணியாளர்கள் 32 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனையும், எழுமாறாக 32 பேருக்கு அன்டிஜென் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. அன்டிஜென் பரிசோதனையில் நாவற்குழியைச் சேர்ந்த ஒருவருக்கு




தொற்று உறுதிசெய்யப்பட்டது. ஏனைய 31 பேருக்கு தொற்று ஏற்படவில்லை. இதேவேளை எழுமாறான பரிசோதனையில் 32 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டன. (ஐ-9)

## இரு சாரதிகளுக்கு தலா 50,000 ரூபா தண்டம்

சாவகச்சேரி, ஜூலை 28
அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய இரு சாரதிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரி பொலி ஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இரு சாரதிகளுக்கும் எதிரான வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இதன்போது குறித்த இரு சாரதிகளும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இருவருக்கும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

# நாட்டரிசியின் விலை குறைப்பு
## ஆலை உரிமையாளர்களுடன் விரைவில் ஒப்பந்தம்

கொழும்பு,ஜூலை 28
நாட்டரிசி ஒரு கிலோகிராமை 100 ரூபாவுக்கும் குறைவான விலையில் விற்பனைசெய்யும் நோக்குடன், நெல் ஆலை உரிமையாளர்களுடன் விரைவில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பல தீர்மானங்களை முன்னெடுத்துள்ளோம். இரசாயன உர இறக்குமதி பாவனைக்கு தடைவிதிக்கப்பட்டதைத் தொடர்ந்து விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான உரப் பாவனையில் பற்றாக்குறை காணப்படுகின்றது என்ற போலியான நிலைப்பாட்டை மக்கள் விடுதலை முன்னணியினரும், ஐக்கிய மக்கள் சக்தியினரும் தோற்றுவித்துள்ளனர். பெரும்போக பயிர்ச்செய்



கைக்குத் தேவையான சேதனப்பசளை உரம் தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக இரசாயன உரம் இறக்குமதி மற்றும் பாவனை தடைசெய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து உர உரிமையாளர்கள் அதுவரையில் இறக்குமதி செய்த இரசாயன உரத்தை விவசாயிகளுக்கு வழங்காமல் முறையற்ற வகையில் பதுக்கிவைத்தனர்.

இதன் காரணமாகவே ஒரு சில பிரதேசங்களில் சிறுபோக பயிர்ச்செய்கைக்குத் தேவையான உரப் பாவனையில் சிக்கல் நிலை தோற்றம் பெற்றது. 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஒரு கிலோக்கிராம் நெல் 30 ரூபாவுக்கு கொள்முதல் செய்யப்பட்டது. 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி கோத்தபய ராஜபக்சவின் ஆலோசனைக்கு அமைய ஒரு கிலோகிராம் நெல் 50 ரூபாவுக்கு கொள்முதல் செய்யப்பட்டது. இதனால் நெற்பயிர்ச்செய்கை செய்யும் விவசாயிகள் பெருமளவில் பயனடைந்தனர்.

அரசியின் விலையைத் தீர்மானிப்பதில் இதுவரை காலமும் சிக்கல்நிலை காணப்பட்டது.

எனவே அரிசியின் நிர்ணய விலையை உறுதியாக பேணும் வகையில் நெல் ஆலை உரிமையாளர்களுக்கும், அரசுக்கும் இடையில் விரைவில் ஒப்பந்தம் செய்யப்படும்- என்றார். (ஓ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் 17 தொற்றாளர்கள் மன்னாரில் அடையாளம்

மன்னார்,ஜூலை 28
மன்னார் மாவட்டத்தில் மேலும் 17 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார். ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
மன்னார் மாவட்டத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையின் முடிவுகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை வெளியானது. இதன்படி 17 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.
இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் தற்போது வரை 167 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடத்தில் மொத்தம் 976 தொற்றாளர்கள் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
இந்த மாதம் தற்போது வரை 2 ஆயிரத்து 341 பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (ஐ

### புதுக்குடியிருப்பைத் தொடர்ந்து

# கரைதுறைப்பற்றுக்கும் பாய்ந்தது கொரோனா

## உத்தியோகத்தர்கள் 8 பேருக்கு தொற்று

**முல்லைத்தீவு, ஜூலை 28**
**முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் பணியாற்றும் பலருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

கரைதுறைப்பற்று காணிப்பகுதியில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் பலருக்கே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்துடன் தொடர்புடைய பணியாளர் வந்து சென்ற காரணத்தால் இந்த தொற்று ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. முதற்கட்ட அன்டிஜென் பரிசோதனையின் போது 8 பேருக்கு தொற்று இருப்பது நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.
தொடர்ந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் அன்டிஜென் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ப-19)

# 2 டோஸ்கள் பெற்றாலும் 'டெல்டா' தொற்ற வாய்ப்பு

கொழும்பு,ஜூலை 28
கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசியின் இரண்டு டோஸைப் பெற்றிருப்பவர்களுக்கும் டெல்டா வைரஸ் பாதிப்பு ஏற்படலாம் என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்று தொற்றுநோயியல் நிபுணர்களை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
குறிப்பாக சில நாடுகளில் தற்போது தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் இது ஒரு சவாலாக அமையும்.
வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தவதற்கும், மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கும் கொரோனாத் தடுப்பூசிகள் செயற்படுகின்றன.
இருப்பினும், உலகெங்கிலும் உள்ள பெரும்பான்மையான மக்களுக்கு இன்னும் தடுப்பூசிகள் செலுத்தப்படவில்லை என்று தொற்றுநோயியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.4)

# செப்ரெம்பரில் நாடு வழமைக்கு

## நம்பிக்கை வெளியிட்டார் ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை 28
எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தின் பின்னரும், நாட்டை முடக்கி வைத்திருக்கும் எண்ணம் இல்லை என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் நிலையில் தற்போது நடைமுறையிலுள்ள மாகாணங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாடு தொடர்ந்தும் உள்ளது.
திருமணம், கோவில் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியே வழங்கப்பட்டுள்ளது.
கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக நாட்டை முடக்கி வைத்திருந்ததே பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம். எனவே நாட்டை தொடர்ந்து முடக்க முடியாது. அதேவேளை ஜூலை மற்றும் ஒகஸ்ட் மாதங்களின் நிறைவில் மேலும் 10.5 மில்லியன் தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைக்கும். இதனால் 80 வீதமானோருக்கு தடுப்பூசி ஏற்ற முடியும் என்று நம்புகின்றோம்- என்றார். (ஒ.4)

# புடவைக்கடையில் நூதனமாக திருட்டு

## சந்தேகநபருக்கு மறியல்

கொழும்பு,ஜூலை 28
புடவைக் கடையொன்றில் 21 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய 12 சரங்களை நூதனமாக திருடிச்சென்றார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
காலி இமதுவ நகரில் இந்தத் திருட்டு நடந்துள்ளது.
குறித்த சந்தேகநபர் கடந்த சிங்கள-தமிழ் புத்தாண்டின்போது துணி வாங்கும் போர்வையில் கடையொன்றுக்குள் சென்று 12 சரங்களையும் திருடியுள்ளார்.
உடைமாற்றும் அறைக்குச் சென்று அனைத்து சரங்களையும் தனது கால்களில் கட்டிக்கொண்டு அவர் சென்றுள்ளார்.
குறித்த கடையில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. காட்சிகள் மூலம் சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டார்.
அவர் கைதுசெய்யப்பட்டு காலி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ஒ.4)





# மன்னாரிலும் நடைபெற்றது கறுப்பு ஜூலை நினைவேந்தல்

மன்னார்,ஜூலை 28
வெலிக்கடை சிறைப் படுகொலையின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) அலுவலகத்தில் நடைபெற்றது.
தமிழீழ விடுதலை இயக்கம்(ரெலோ) கட்சியின் மாவட்ட அமைப்பாளர் லூஸ்ரின் மோகன்ராஜ் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட தலைவர் தங்கதுரை, தளபதி குட்டிமணி, முன்னணிப் போராளிகளான ஜெகன்,தேவன் உள்ளிட்ட 53 அரசியல் கைதிகளுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன் போது கட்சியின் உறுப்பினர்கள்,கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளர் டானியல் வசந்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (ஐ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்படும் சிறுவர்கள்

*தினமும் இருவர் மருத்துவமனையில் சேர்ப்பு*

கொழும்பு,ஜூலை 28

**பல்வேறுவகையான சித்திரவதை மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகி, குறைந்தது இரண்டு சிறுவர்களாவது, ஒவ்வொரு நாளும் மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர். இவர்களில் சிலர் எலும்பு முறிவுகள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட கடுமையான துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று சிறுவர் நல மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் தீபல் பெரேரா தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த போது ஹிஷாலினி என்ற சிறுமி உயிரிழந்த சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்யும் சம்பவங்கள் மருத்துவமனைகள் மற்றும் பொலிஸ் நிலையங்களில் தினமும் பதிவாகி வருகின்றன. இதுபோன்ற சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தும் வருகின்றன.

16 வயது வரையான சிறுவர்களுக்கு பாடசாலைக் கல்வி கட்டாயமாக்கப்பட்டிருந்தாலும், அந்த வயதுக்குட்பட்ட ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாத நிலையில் உள்ளனர்.

குறிப்பாக உடல் மற்றும் மன ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்படுபவர்களும் உள்ளனர். இது போன்ற சம்பவங்கள் எந்தவொரு பொறுப்புள்ள நிறுவனத்துக்கும் தெரிவிக்கப்படவில்லை.

பெற்றோரின் பாசம் இல்லாமல் அநாதை இல்லங்களில் வாழும் சிறுவர்களின் எண்ணிக்கையும் 13 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது- என்றார். (ஒ. 4)

# சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக சட்டங்களை கடுமையாக்க வேண்டும்

*பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்கம் வலியுறுத்து*

கொழும்பு,ஜூலை 28

சிறுவர் துஷ்பிரயோகம், வன்முறை மற்றும் சிறுவர் அடிமைத்தனத்துக்கு எதிராகக் கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மகளிர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சங்கத் தலைவி இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன. இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க புதிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்வதைப் பெண்கள் முதலில் எதிர்க்க வேண்டும் என்று சிலர் நினைக்கின்றனர். ஆனால் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் அடிமைத்தனத்தை நிபந்தனை யின்றி எதிர்ப்பது பொறுப்பான சமூகத்தின் கடமையாகும். சிறு வர்க ளுக்கு எதிராக எது நிகழ்ந்தாலும் அது வன்முறையின் வெளிப்பாடே. எனவே சட்டத்தை நடைமுறைப்படுத்த ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட திட்டம் தேவை.

பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர்கள் என்பதால், அவர்களின் எதிர்கால நலன்களைக் கருத்தில் கொண்டு பொறுப்புடன் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்த விரைவாகச் செயற்பட வேண்டும். இது சிறுமி ஹிஷாலினிக்கு நீதியை விரைவாகப் பெற்றுக் கொடுப்பதோடு மட்டுமல்லாது, எதிர்காலத்தில் சிறுவர்களைப் பாதுகாக்கவும் உதவும் - என்றார். (ஒ, 4,சி)

# ஆளுங்கூட்டணியில் பெரமுனவே பலமானது

*சு.கவுக்கு சாகர பதிலடி*

கொழும்பு,ஜூலை 28

தற்போதைய ஆளும் கூட்டணியில் முக்கிய கட்சி சிறிலங்கா பொதுஜன பெரமுன என்பதை சிறிலங்கா சுதந்திரக்கட்சி மனதில் கொள்ளவேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர கரியவாசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இன்னும் அதே பழைய மனநிலையில் இருக்கின்றனர். அதாவது அவர்கள் பிரதான கட்சி என்ற மனநிலையில் இருக்கின்றனர். ஆனால் இப்போது சுதந்திரக்கட்சி கூட்டணியில் உள்ளது. பிரதான கட்சி அல்ல.பொதுஜன பெரமுனவே பிரதான கட்சி.

எனவே அரசியல் முதிர்ச்சியைக் கொண்ட அங்குள்ள தலைவர்கள் அதைப் புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன். சிலர் அதை உணராமல் பல்வேறு அறிக்கைகளை வெளியிடுகின்றனர். ஆனால், இவையெல்லாம் தீர்க்கப்பட்டு சாதகமாக முன்னேற முடியும் என்று ஒரு கட்சியாக நாங்கள் நம்புகிறோம். எங்களுடன் இருக்கும் ஏனைய கட்சிகள் பொதுஜன பெரமுனவின் கருத்துக்களுக்கு அடிபணிய வேண்டும் என்றும் அர்த்தமில்லை.

ஒவ்வொரு கட்சிக்கும் கருத்தைத் தெரிவிக்கும் உரிமை உள்ளது - என்றார். (ஒ,4)

# பயணக் கட்டுப்பாடுகள் தளர்வு: மறுபரிசீலனை செய்ய வேண்டும்

*மருத்துவர்கள் சங்கம் கோரிக்கை*

கொழும்பு,ஜூலை 28

பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கான நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று விசேட மருத்துவர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுவாக மக்கள் ஒன்றுகூடும் இடங்களில் குறைந்தபட்சம் 50 முதல் 60 வரையானோரே இருக்க வேண்டும் அல்லது அதை விடக் குறைவாக இருக்க வேண்டும்.

நாட்டில் வெற்றிகரமாக தடுப்பூசி செலுத்தப்படுகின்ற போதிலும், எவருக்கு முன்னுரிமை அளிப்பது என்பதில் இன்னும் சிக்கல்கள் உள்ளன.

ஒவ்வொரு வகை தடுப்பூசிகளையும் மாகாண மட்டத்தில் விநியோகிப்பதற்குப் பதிலாக, உலக போக்குகளுக்கு ஏற்ப தடுப்பூசி வழங்குவதே பொருத்தமானது என்று நம்புகின்றோம்.

அதாவது டெல்டா மாறுபாடுடைய வைரஸுக்கு எதிராக உலகின் பிற நாடுகள் பொருத்தமான தடுப்பூசிகளைத் தேர்ந்தெடுக்கின்றன. எனவே டெல்டா பரவலைக் கட்டுப்படுத்தாத தடுப்பூசிகளை திடீரென ஏற்றுக்கொள்வதில் சிக்கல்களும் உள்ளன என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ, 4, சி)

# பழுதடைந்த வீதி விளக்குகளை மாற்ற நகரசபையால் நடவடிக்கை

சாவகச்சேரி,ஜூலை 28

சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட வீதிகளில் பழுதடைந்து காணப்படும் மின்விளக்குகளை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன் போது சபை உறுப்பினர் ந.திருக்குமரன் உரையாற்றுகையில்;

சபைக்குட்பட்ட வீதிகளில் உள்ள மின்விளக்குகள் பெரும்பாலும் பழுதடைந்து அப் பகுதிகள் இருளாக காணப்படுகின்றன.

சபையின் உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் இரவு வேளையில் வட்டார ரீதியில் நேரடியாகச் சென்று பழுதடைந்த மின்குமிழ்களுக்குப் பதிலாக புதிய விளக்குகளைப் பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்றார்.

இக் கருத்தை அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டனர். இதனையடுத்து சபை வாகனங்களைப் பயன்படுத்தி வட்டார ரீதியாக பழுதடைநத விளக்குகளை மாற்றி புதிய மின்விளக்குகள் பொருத்துவது என்று சபையால் முடிவுசெய்யப்பட்டது. (ஐ-9)



# சேதன விவசாய முறையில் இலங்கை முன்னுதாரணம்

*ஐ.நா. மாநாட்டில் ஜனாதிபதி பெருமிதம்*

சேதன விவசாயத்துக்கான இலங்கையின் அணுகுமுறை, மேலும் பல நாடுகளுக்கு உந்து சக்தியாக அமையும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

இத்தாலியின் ரோம் நகரில், ஐ.நா உணவு முறைமைகள் மாநாட்டின் முன்அமர்வு நிகழ்வு நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இதில் காணொலித் தொழில்நுட்பத்தின் ஊடாக உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையானது ஆயிரம் வருடங்களுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட ஒரு பண்டைய நீரியல் நாகரிகத்துடன் ஆழமாகப் பிணைந்திருக்கும் வளமான விவசாயப் பாரம்பரியத்தைக் கொண்ட நாடாகும். சேதன விவசாயம் என்பது எமது நாட்டுக்குப் புதிதல்ல. புதிய அறிவியல் முன்னேற்றங்கள் மற்றும் முகாமைத்துவ நுட்பங்களுடன் இதில் புத்துயிர்ப்புப் பெற முயற்சிக்கின்றோம்.

உணவு முறைமையை மாற்றுவது, மனிதகுலத்தையும் நாம் வாழும் உலகையும் நிலைப்படுத்த நாம் கைக்கொள்ள வேண்டிய விடயங்களின் இன்றியமையாத பகுதியாகும்.

மனிதகுலமானது சமூக, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக வேறுபட்டிருந்தாலும், அது எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் அனைத்தும் உலகளாவியவை ஆகும். இவற்றைத் தனியாக எதிர்கொள்ள முடியாது. இவற்றை வெற்றிகொள்ள வேண்டுமானால் கூட்டாகவே எதிர்கொள்ள வேண்டும் - என்றார்.

மாநாட்டில் உலக உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல், காலநிலை மாற்றத்தைத் தணித்தல், சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலுப்படுத்துதல், உயிர்ப் பல்வகைமை இழப்பை எதிர்த்துப் போராடுதல் போன்ற விடயங்கள் தொடர்பில், ஏனைய நாடுகளின் அரச தலைவர்கள் கவனம் செலுத்தியிருந்தனர் என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சுறுத்தல்கள் மத்தியில்

# வலி.கிழக்கு பிரதேச சபையில் கறுப்பு ஜூலை நினைவேந்தல்

**யாழ்ப்பாணம்,ஜூலை 28**
**அச்சுறுத்தல்களின் மத்தியிலும் கறுப்பு ஜூலை நினைவேந்தல் வலி.கிழக்கு பிரதேச சபையில் நேற்றுக் காலை உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது.**



பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் சபை உறுப்பினர்கள்,உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களின் பங்கேற்புடன் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.
வெலிக்கடை சிறையில் 1983 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட தங்கத்துரை, குட்டிமணி மற்றும் ஜெகன் உள்ளிட்ட 53 அரசியல் கைதிகளுக்கும் அவ்வேளை படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களுக்குமாக இரண்டு நிமிடங்கள் அகவணக்கம் செலுத்தப்பட்டது.
இதனைத் தொடர்ந்து பொது ஈகைச்சுடரை தவிசாளர் ஏற்றி வைத்து உரையாற்றுகையில், படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொள்வது மட்டுமல்ல அவர்களை நினைவுகூர்வதும் இராணுவ மயமாக்கலின் ஊடாக தடை செய்யப்படுகின்றது. இன்றைய தினம் கூட சுகாதார நடைமுறைகளுக்கு முழுமையாக மதிப்பளித்து நினைவேந்தலை நாம் செய்ய முற்பட்ட போது காலையிலேயே பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் எமது அலுவலகம் முன்பாக நோட்டமிடுகின்றனர். இதனால் அச்சம் காரணமாக பல உறுப்பினர்கள் நிகழ்வில் பங்கேற்கவில்லை.
உலகம் அறிந்த கறுப்பு ஜூலை போன்ற இனவாதத் தாக்குதல்கள் இனியும் தமிழ் மக்கள்மீது முடுக்கி விடப்படக்கூடாது என்பதற்காகவும் எமது நினைவுகூர்தல் சுதந்திரத்தை பாதுகாப்பதற்காகவும் இந்த நாளை உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கின்றோம்.
தமிழர் வரலாற்றில் ஏராளமான கொடுமைகள், மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன. வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை நடைபெற்று 38 ஆண்டுகள் கடந்த போதும் எமக்கு நீதி வழங்கப்படவில்லை.
இனி இவ்வாறான நிகழ்வு நடைபெறாது என்பதற்கும் உத்தரவாதமில்லை என்ற நிலைமையையே எம் இனத்துக்கு மறுக்கப்படும் நீதி உணர்த்துகிறது-என்றார். (ஐ-13)

# இணையக் கற்றலால் கண்களுக்கு பாதிப்பு

## மாணவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை 28
இணையத்தின் மூலம் மாணவர்கள் கல்வியில் தொடர்ந்து ஈடுபடுவதால், கண்களில் பிரச்சினைகள் உருவாகும் அபாயம் உள்ளது என்று சிறப்பு கண் அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் தீபானி வெவெல்ல தெரிவித்துள்ளார்.
இணைய வகுப்பின்போது மாணவர்கள் அவ்வப்போது கண் சிமிட்ட வேண்டும். இடைக்கிடையில் வெவ்வேறு திசைகளில் பார்க்க வேண்டும். ஒரு மடிக்கணினி அல்லது தொலைபேசி திரையை நீண்டநேரம் பார்த்தால் கண்கள் சிமிட்டுவதை நிறுத்தி, கண்களை உலர வைத்துவிடும்.
எனவே மாணவர்கள் இணைய வகுப்பின்போது ஒவ்வொரு 20 நிமிடங்களுக்கும் ஒருமுறை கண்களை இலகுவாக்கி சுற்றிப் பார்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ4)



# மணல், கிரவல் அகழ்வு தொடர்பில் ஒட்டுசுட்டானில் கலந்துரையாடல்

முல்லைத்தீவு, ஜூலை 28
முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத மணல் மற்றும் கிரவல் அகழ்வுகளைத் தடுத்தல், அதேபோன்று சட்ட ரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற மணல் மற்றும் கிரவல் அகழ்வுகளை முறையான பொறிமுறை ஒன்றின் மூலம் விநியோகித்தல் போன்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுடனான கலந்துரையாடலொன்று நேற்றுஅஒட்டுசுட்டான் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.
குறித்த கலந்துரையாடலில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தனபாலசிங்கம் அகிலன் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் பொறுப்புடைய தலைவர்கள் கலந்துகொண்டனர். (ப)

# கோவிலுக்கு சென்ற இளம் பெண் மாயம்

## பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 28
வீட்டில் இருந்து சென்ற இளம் பெண் ஒருவரைக் காணவில்லை என்று பெற்றோரால் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை, அய்யனார் கோவிலடியைச் சேர்ந்த செல்வராசா கீர்த்தனா (வயது-27) என்பவரே காணாமல் போயுள்ளார்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் வீட்டில் இருந்து துர்க்கை அம்மன் கோவிலுக்கு சென்றவர் இதுவரை வீடுதிரும்பவில்லை என்றும் இவர் தொடர்பான தகவல்கள் தெரிந்தால் 0762896596, 0765874880, 0763156488 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அறியத்தருமாறும் பெற்றோர் கோரியுள்ளார். (ப)

## கணவன், மனைவி கொலை;

# 11 வருடங்களின் பின் சந்தேகநபர் கைது

வவுனியா, ஜூலை 28
இரட்டைக் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் 11 வருடங்களின் பின்னர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
வவுனியா ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் கடந்த 2011 ஆம் ஆண்டு கணவன், மனைவி ஆகியோர் கொலை செய்யப்பட்டிருந்தனர்.
குறித்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று சநகேக்கிகப்படும் இருவர் அந்தக் காலப்பகுதியில் கைதுசெய்யப்பட்டு வவுனியா நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். ஆயினும் குறித்த இருவரும் நீதிமன்ற வழக்குத் தவணைகளில் முன்னிலையாகாது தலைமறைவாகியிருந்தனர். அவர்களில் ஒருவர் ஓமந்தை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-110)

# ரிஷாத்தின் வீட்டிலிருந்து மாயமான 11 சிறுமிகள்

## விசேட பொலிஸ் குழு விசாரணை

கொழும்பு,ஜூலை 28
முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டுக்கு வேலைக்கு அழைத்து வரப்பட்ட 11 சிறுமிகள் தொடர்பில், விசேட பொலிஸ் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. டயகமவைச் சேர்ந்த 16 வயதான ஹிஷாலினி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், ரிஷாத் பதியுதீனின் குடும்பத்தினருக்கு வேலை செய்வதற்காக 11 சிறுமிகள் அழைத்து வரப்பட்டிருந்தனர் என்று தெரியவந்துள்ளது.
இவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
சில வருடங்களுக்கு முன்னர் அவரது வீட்டில் கடமையாற்றிய 22 வயதுடைய பெண்ணிடம் மேற்கொண்ட விசாரணைகளில் அவர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகி உள்ளமையும் தெரியவந்துள்ளது.
இதனையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் ரிஷாத் பதியுதீனின் மனைவியின் சகோதரன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் ரிஷாத் பதியுதீனின் வீட்டுக்கு அழைத்து வரப்பட்ட சிறுமிகள் எங்கு இருக்கின்றார்கள், என்ன செய்கின்றார்கள் என்பது தொடர்பில் விசாரணை செய்வதற்காக டயகம பகுதிக்கு விசேட பொலிஸ் குழு சென்றுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நாமே நமக்கு பாதுகாப்பு

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதாகக் காண்பிக்கப்படுகின்றது. பி.சி.ஆர். பரிசோதனைகளைக் குறைத்துவிட்டு, தொற்றின் வேகம் சரிந்துவிட்டதாக அரசு கூறுகின்றது. இது ஆபத்தான போக்கு என்பதை மருத்துவர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் என்போர் சுட்டிக்காட்டுகின்றனர். வடக்கு மாகாணத்தில் இந்த நிலைமையில் கொஞ்சம் மாறுதல் உண்டு. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. ஆனால் அன்டிஜன் சோதனை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது.

வடக்கைப் பொறுத்தவரையில் தற்போது இந்து ஆலயங்களின் திருவிழாக் காலம். கடந்த ஆண்டு கொரோனா காரணமாக பல ஆலயங்களில் வருடாந்தப் பெருந்திருவிழாக்கள் நிறுத்தப்பட்டிருந்தன. ஆனால் இப்போது நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகின்றது. அந்த அனுமதியை முறைகேடாகப் பயன்படுத்துவதால் தொற்றாளர்கள் எண்ணிக்கை வடக்கில் – குறிப்பாக யாழ்ப்பாணத்தில் – அதிகரித்துச் செல்கின்றது. ஆலயத் திருவிழாக்களில் அதிகளவானோர் ஒன்று கூடுகின்றனர். தற்போது கொரோனாக் கட்டுப்பாட்டுக்காலம் என்பதை மறந்து செயற்படுகின்றனர். ஆலயங்களில் தொடங்கிய கொரோனாக் கொத்தணிகள் தற்போது அரச அலுவலகங்கள் வரை விரிந்து பரந்து பரவியுள்ளன. அன்றாட வாழ்க்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதோ அல்லது இன்னொரு பொது முடக்கமோ – பயணத் தடையோ சாத்தியமில்லாத நிலைமைதான் இலங்கையில் உள்ளது. இவ்வாறானதொரு நிலையில், கொரோனா வைரஸில் அதி தீவிரம் கூடிய டெல்டா வைரஸூம் இலங்கையில் வேகமாகப் பரவி வருகின்றது.

சாதாரண கொரோனா வைரஸைவிட ஆயிரம் மடங்கு வீரியம் கூடியது டெல்டா வைரஸ் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் பல பகுதிகளிலும் டெல்டா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட தொற்றாளர்கள் உள்ளனர் என்று சுகாதார அமைச்சு கூறுகின்றது. இப்படியொரு ஆபத்தான சூழலிலேயே எம்மவர்கள் தங்கள் கைகளைக் கொண்டே கண்களைக் குத்தும் கைங்கரியத்தைச் செய்கின்றனர். யாழ்ப்பாணத்தில் சுமார் ஒரு லட்சம் பேர் வரையில் ஆகக் குறைந்தது முதலாவது டோஸ் தடுப்பூசியையாவது ஏற்றியுள்ளனர். இது மக்கள் மத்தியில் கொரோனா தொற்றாது அல்லது கொரோனாவால் பாதிப்பு இல்லை என்ற மனநிலையை உருவாக்கியுள்ளது. கொரோனாக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை மக்கள் மீறுவதற்கும் இது ஏதுவாக அமைந்துள்ளது. சமூக இடைவெளியைப் புறந்தள்ளி ஒன்றுகூடுவதன் ஊடாக கொரோனாக் கொத்தணிகளின் உருவாக்கத்துக்கு வித்திடுகின்றனர்.

தடுப்பூசி ஏற்றுவதால் கொரோனாத் தொற்று ஏற்படாது என்று எங்கும் நிரூபிக்கப்படவில்லை. துரதிர்ஷ்டவசமாக தடுப்பூசியின் இரண்டு டோஸ்களும் ஏற்றிக் கொண்ட ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார் எனவும் அறிக்கையிடப்பட்டிருக்கின்றது. இவ்வாறானதொரு சூழலில் ஒவ்வொருவரும் தமது பாதுகாப்பையும் தங்கள் அன்புக்குரிய உறவுகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவேண்டிய கடப்பாட்டில் இருக்கின்றனர்.சமூக இடைவெளியைப் பேணுவதும், முகக் கவசம் அணிவதும், அடிக்கடி கைகளைச் சுத்தம் செய்வதன் ஊடாகவும் கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பின்பற்றவேண்டும்.ஆலய வழிபாடுகள் என்ற பெயரிலும், கொண்டாட்டங்கள், விருந்துபசாரங்கள் என்ற அடிப்படையிலும் சமூக இடைவெளிகளைப் புறந்தள்ளி ஒன்று கூடுவதன் ஊடாக எமது சமூகத்தின் அழிவுக்கு நாம் ஒவ்வொருவரும் காரணமாகி விடக் கூடாது. கொரோனா உயிரிழப்புக்கள் வடக்கில் நூற்றி ஐம்பதை அண்மித்துள்ளன. எங்கள் பாதுகாப்பில் நாம் அக்கறையீனமாக இருந்து ,கொரோனா உயிரிழப்பை விலை கொடுத்து வாங்கக் கூடாது.

டெல்டா வைரஸ் தீவிரத்தால் இந்தியா எவ்வாறு அல்லோல கல்லோலப்பட்டது என்பதை அறிந்த நாம், அவ்வாறானதொரு நிலைமையை எமது பிரதேசத்தில் ஏற்படவிடாமல் பாதுகாக்கவேண்டும். இந்தியாவைப் போன்று ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்பட்டால் இலங்கை அரசு தமிழர் பகுதிகளுக்கு நியாயமான அளவில் மருத்துவத் தேவையை வழங்குமா என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். போர்க்காலங்களில் மருத்துவ உதவிகளையோ, மருந்துப்பொருள்களையோ வழங்காது மக்கள் துடிதுடித்து உயிரிழப்பதை வேடிக்கை பார்த்த அரசு இப்போது மட்டும் அக்கறை கொள்ளும் என்று நம்ப முடியாது. இந்தியாவுடனான இராஜதந்திர மோதலால் சீனா அன்பளிப்பாக வழங்கும் தடுப்பூசிகளை அரசு வடக்கு கிழக்குக்கு வழங்குகின்றது. ஆனால், தீவிர நிலைமை ஏற்பட்டால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் புறக்கணிக்கப்படும் நிலைமைதான் தோன்றும்.

எங்கள் பாதுகாப்பு எங்கள் கைகளில் என்று உணர்ந்து செயற்படவேண்டும்.



# யாழ். இந்து ஆலயங்களில் சுகாதார நடைமுறை மோசம்

### ஆபத்துக்கு வழிவகுக்கும் என மாவட்டச் செயலர் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூலை 28**

**யாழ். மாவட்டத்தில் இந்து ஆலயங்களில் சுகாதார நடைமுறைகள் சரியாகப் பின்பற்றப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி யாழ்ப்பாண குடாநாட்டில் இந்து ஆலயங்களில் பூசை வழிபாடுகள், திருவிழாக்கள் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் வழங்கப்பட்டுள்ள அனுமதியை மக்கள் பின்பற்றவில்லை. சுகாதார நடைமுறைகளை பின்பற்றாது இந்து ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை மிகவும் ஆபத்தானது. இது அபாய நிலைக்கு இட்டுச் செல்லக்கூடிய ஒரு விடயம். எனவே பொதுமக்கள் இந்த விடயம் தொடர்பில் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும் நேற்றைய தினம் (நேற்றுமுன்தினம்) கரவெட்டிப் பகுதியில் இந்து ஆலய பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டவர்களில் 49 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்த இக்கட்டான காலகட்டத்தில் நாம் அனைவரும் ஒத்துழைத்தால் மாத்திரமே இந்த தொற்றில் இருந்து தப்பிக்க முடியும். சுகாதாரப் பிரிவினரால் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளபோதிலும், அந்த தளர்வை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுவதன் மூலமே வழமைபோல் எமது செயற்பாடுகளைச் முன்னெடுக்க முடியும். எனவே பொது மக்கள் தற்போதுள்ள நிலைமையை அனுசரித்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிச் செயற்படவேண்டும் - என்றார்.(ப-26)

## சைனோஃபோர்ம் தடுப்பூசியின் இரு டோஸையும் பெற்றவர் சாவு

கொழும்பு.ஜூலை 28

சைனோஃபோர்ம் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்ட நபர் ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

காலி கராப்பிட்டிய போதனா மருத்துவமனையில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

73 வயதான நபர், மே மாதம் 29ஆம் திகதி முதலாவது டோஸையும், ஜூன் மாதம் 28 ஆம் திகதி இரண்டாவது டோஸையும் பெற்றிருந்தார்.

இந்த நிலையில் அவருக்கு ஏற்பட்ட திடீர் சுகவீனத்தை அடுத்து, கராப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அங்கு அவர் உயிரிழந்தார். அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ-4)

## ஒவ்வொரு மாவட்டத்திலும் டெல்டா பரவியிருக்கலாம்

### *சுகாதாரத் திணைக்களம் எச்சரிக்கை*

கொழும்பு,ஜூலை 28

டெல்டா வைரஸ் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் பரவியிருக்கலாம் என்று சுகாதார சேவைகளின் துணை இயக்குநர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் டெல்டா தொற்றாளர்கள் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

டெல்டா வகை தொற்றாளர்கள் உள்ள பகுதியில் அதிகம் பேர் பாதிக்கப்படுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

டெல்டாவால் பாதிக்கப்பட்ட 68 பேரின் மாதிரிகளைப் பரிசோதிக்கும்போது, இது கண்டுபிடிக்கப்பட்டது. இவர்கள் மூலம் அதிக எண்ணிக்கையிலானோர் சூழலில் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடும்.

எனவே மக்கள் டெல்டா கொத்தணிகளை உருவாக்க அனுமதிக்க வேண்டாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சிறுமி ஹிஷாலினியின் சாவுக்கு நீதி கோரி முல்லையிலும் போர்

**முல்லைத்தீவு, ஜூலை 28**

**மலையகச் சிறுமி ஹிஷாலினியின் உயிரிழப்புக்கு நீதிகோரி நேற்று முல்லைத்தீவிலும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.**

இந்த ஆர்ப்பாட்டம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட, விசுவமடு, ரெட்பானாச் சந்தியில் இடம்பெற்றது.
சிறுவர்கள் பணிக்கமர்த்தப்படுவதற்கும், பெண்கள் மற்றும் சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுவதற்கும் தமது கண்டனங்களை வெளியிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், பணிக்கமர்த்தப்படும் வயதெல்லையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் வலியுறுத்தினர். இது தொடர்பில் ஜனாதிபதிக்கு மனு கையளிக்கப்பட்டதோடு, ஆர்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த நாடளுமன்ற உறுப்பினர் வினோநோகராத லிங்கத்திடமும் மனு ஒன்று கையளிக்கப்பட்டது.
இந்த ஆர்ப்பாட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-246)



## பேர்ள் கப்பல் தீப்பற்றியதால் 307 கடல் உயிரினங்கள் இறப்பு

கொழும்பு,ஜூலை 28
இலங்கைக் கடற்பரப்பில் எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால், இதுவரை 307 கடல் வாழ் உயிரினங்கள் உயிரிழந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
258 ஆமைகள், 43 டொல்பின்கள் மற்றும் ஆறு திமிங்கலங்கள் உயிரிழந்த நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளன.
இது தொடர்பான அறிக்கையை ஆய்வாளர் திணைக்களம் நேரடியாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.
எனினும் கடல் உயிரினங்களின் உயிரிழப்புக்கான காரணம் இன்னும் உறுதியாகக் கூறப்படவில்லை. கடல் உயிரினங்கள் இறப்பதற்கு வேறு காரணங்களும் இருக்கலாம். இது தொடர்பான விசாரணைகள் இன்னும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளர் மருத்துவர் அனில் ஜசிங்க தெரிவித்துள்ளார். (ஒ.4)

## சுகாதார விதிமுறைகள மீறுகிறதா சாவகச்சேரி நகர பொதுச்சந்தை?

### நகரசபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

சாவகச்சேரி, ஜூலை 28
கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் நிலையில் சாவகச்சேரி பொதுச் சந்தையில் பெருமளவு வியாபாரிகள் முகக்கவசம் அணியாமல் வியாபாரம் செய்கின்றனர். அத்தோடு அவர்கள் உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகளுடன் நேரடியாகத் தொடர்புகளைக் கொண்டுள்ளதால் நுகர்வோருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட வாய்ப்புகள் உள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இது தொடர்பில் நகரசபை உறுப்பினர் திருக்குமரன் சபையில் தெரிவிக்கையில்;
கொரோனாத் தொற்று அதிகரிக்கும் சூழ்நிலையில் இந்த வியாபாரிகள் சுகாதார நடைமுறைகளைப் போணாதமை கவலை தருகின்றது.
சந்தைக்கு வரும் நுகர்வோரும் முகக் கவசம் அணியாமலும் , சமூக இடைவெளி பேணாமலும் காணப்படுகின்றனர். இவற்றைத் தடுக்க நகரசபையினர், சுகாதாரப் பிரிவினர் மற்றும் பொலிஸார் அடிக்கடி சந்தைக்குள் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.
நகரசபையினர் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களில் விழிப்புணர்வு செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டும். நகரப் பகுதியில் கடமையாற்றும் பொலிஸார் சந்தை வியாபாரிகள் மற்றும் நுகர்வோர், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றில் முகக் கவசம் அணியாதோர் மீது ஆரம்பத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தற்போது அவ்வாறான பரிசோதனை குறைந்துள்ளது - என்றார்.
பதிலளித்த தவிசாளர் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ப-9)



## 6 போலி நாணயத்தாள்களுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

கொழும்பு,ஜூலை 28
ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் ஆறுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன் போலி நாணயத்தாள்களை அச்சுடுவதற்குப் பயன்படுத்திய இயந்திரமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபர் கட்டுநாயக்க பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்களை கொடுத்து, பொருள்களைக் கொள்வனவுசெய்ய முயன்றுள்ளார்.
நாணயத்தாள் தொடர்பில் சந்தேகம் கொண்ட வர்த்தக நிலையத்தின் உரிமையாளர், பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். அதனையடுத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கைதான சந்தேகநபர் வெல்லம்பிட்டி, சேதவத்தைப் பகுதியில் வசிப்பவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.4)



## முடக்கத்தில் உள்ள மக்களுக்கு முன்னணி நிவாரண உதவி

பருத்தித்துறை, ஜூலை 28
பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட, கொவிட் முடக்கத்துக்கு உள்ளான கொட்டடி கிராம மக்களுக்கான நிவாரணப் பணியை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மேற்கொண்டிருந்தனர்.
இவ் நிவாரணப் பணியானது கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் இடம்பெற்றது.
இதன்போது நிவாரணப் பொருள்களை வழங்குவதற்கு இராணுவத்தினர் தடை விதித்தனர் என்றும், இதனால் இராணுவத்தினருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாருக்கும் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப-26)

# வீட்டுப் பணியாளர்களாக தொழில்புரியும் சிறுவர்கள்

## விசேட சோதனை ஆரம்பம்

கொழும்பு,ஜூலை 28
வீட்டுப் பணியாளர்களாக தொழில்புரியும் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களை அடையாளம் காணும் நோக்கில், மேல் மாகாணத்தில் சிறப்பு சோதனை நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
கடந்த சில நாள்களில் வீட்டுப் பணியாளர்களாக தொழில்புரியும் சிறுவர்களைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தும் சம்பவங்கள் அதிகளவில் பதிவாகியுள்ளன.
அதேவேளை கடந்த ஆறு மாதங்களுக்குள் சிறுவர்கள் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல்கள் சம்பவம் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 4 ஆயிரத்து 740 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.
இந்த நிலையில் பொலிஸார் சிறப்பு சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனா என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ஒ.4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிர சிகிச்சையில் நான்கு சிறுவர்கள்

கொழும்பு, ஜுலை 28

**நாட்டில் நாளாந்தம் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் கணிசமானளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளபோதிலும், சிறுவர்கள் தொற்றுக்கு உள்ளாகும் வீதம் அதிகரித்துள்ளது.**

சீமாட்டி சிறுவர் மருத்துவனையில் மாத்திரம் 61 சிறுவர்களுக்கு கடந்த ஒரு வாரத்தில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களில் நால்வர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சிறுவர்கள் மாத்திரமின்றி அவர்களது பெற்றோரில் தாய் அல்லது தந்தைக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படும் வீதம் அதிகரித்துள்ளது.

மருத்துவமனைக்கு தமது பிள்ளைகளை சிகிச்சைக்காக அழைந்துவந்த பெற்றோருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 18 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை சீமாட்டி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் சகல சிறுவர்களுக்கும் அன்டிஜென் பரிசோதனை முன்னெடுக்கப்படும். இதன்போது பெற்றுக் கொள்ளப்படும் மாதிரிகளில் சந்தேகத்துக்கிடமானவை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். அவர்களில் 61 சிறுவர்களுக்கு தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது. இது வேறு நோய்களுக்காக சிகிச்சைபெறுவதற்கு வருபவர்களில் தெரிவுசெய்யப்பட்டு எடுக்கப்படும் பரிசோதனைகளின் முடிவாகும்.

அவ்வாறெனில் சமூகத்தில் இன்னும் இனங்காணப்படாத தொற்றாளர் அதிகளவில் காணப்படுகிறார் என்பது ஸ்திரமாகும்.

வழமையை விட சிறுவர்கள் தொற்றுக்கு உள்ளாகும் வீதம் அதிகமாகக் காணப்படுவதால், பெற்றோர் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். (ஒ.4)



## முல்லை. நித்தகைக்குளத்தை சீரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜுலை 28

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றின் நித்தகைக்குளத்தைச் சீரமைப்பதற்கான முயற்சிகள் நீண்ட காலமாகவே இடம்பெறாமல் உள்ளன என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்;

இறுதியாக முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வனவளத் திணைக்களத்தின் பிடியில் உள்ள இக்குளத்தை விடுவிப்பதற்கு சுற்றுச்சூழல் அறிக்கை கிடைக்கப்பெற்றால் விடுவிக்க முடியும் என வனவளத் திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தால் நித்தகைக்குளம் பகுதிக்குச் சென்று ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இக்குளம் சீரமைக்கப்படாமலேயே உள்ளது. குளத்தின் கீழ் 850 ஏக்கர் வரையான நிலப்பரப்பு காணப்படுகின்றது.

குளம் சீரமைக்கப்பட்டால் கரைதுறைப்பற்றின் தண்ணிமுறிப்பின் ஆறுமுகத்தான் குளத்தில் உள்ள 110 குடும்பங்களுக்கு இக்குளத்தின் கீழ் வயல் நிலங்கள் வழங்குவது என கூட்டங்களில் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் குளம் சீரமைப்பதற்கான நிதி கிடைக்கவில்லை என நீர்ப்பாசனத் திணைக்களத்தால் தெரிவிக்கப்படுகின்றது- என்றனர். (ப-13)

## பயங்கரவாத தாக்குதல் ஆபத்து இலங்கையில் குறைவடைந்தது

### பிரிட்டன் அறிவிப்பு

கொழும்பு,ஜுலை 28

இலங்கையில் பயங்கரவாதிகள் தாக்குதல்களை நடத்த முயற்சிக்கும் ஆபத்து மிகக் குறைவடைந்துள்ளது என்று பிரிட்டன் அறிவித்துள்ளது.

முன்னதாக பிரிட்டன் தனது நாட்டுப் பிரஜைகளுக்கான பயண ஆலோசனையில், இலங்கையில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தக்கூடும் என்று எச்சரித்திருந்தது.

ஹொட்டல், சுற்றுலாத் தளங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் போன்ற வெளிநாட்டினர் பார்வையிடும் இடங்களில் தாக்குதல்கள் கண்மூடித்தனமாக இருக்கக்கூடும் என்றும் எச்சரித்திருந்தது. இந்த நிலையில் அந்த ஆபத்து மிகக் குறைவு அல்லது குறைவடைந்து வருகின்றது என்று பிரிட்டன் தற்போது தெரிவித்துள்ளது.



அதேவேளை கொழும்பில் இருந்து இரசாயனப் பொருள்களைக் கொண்டுவந்த கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து, உள்ளூர் கடற்கரைகளில் கரையொதுங்கும் அடையாளம் தெரியாத பொருள்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும்.

இலங்கையில் நிலவும் கொரோனாத் தொற்று நிலைமைகள் மற்றும் டெங்குக் காய்ச்சல் தொடர்பிலும் அவதானமாக செயற்படுமாறும் வலியுறுத்தியுள்ளது.

எனினும் ஈராக் மற்றும் சிரியாவில் மோதலால் தூண்டப்பட்ட குழுக்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து, இங்கிலாந்து நலன்களுக்கும், பிரிட்டிஷ் நாட்டினருக்கும் எதிராக உலகளவில் பயங்கரவாதத் தாக்குதல் அச்சுறுத்தல் உள்ளது.

இந்த நேரத்தில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று இங்கிலாந்து வெளியுறவு அலுவலகம் சுட்டிக் காட்டியுள்ளது. (ஒ.4)

## வட்டுவாகல் பாலத்துக்கு விமோசனம் எப்போது?

### மக்கள் விசனம்

முல்லைத்தீவு, ஜுலை 28

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம் சீரமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டபோதும், கடந்த பத்தாண்டுகளில் அந்த சீரமைப்புகக்கான எந்த முயற்சிகளும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்;

2010ஆம் ஆண்டில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தால் வட்டுவாகல் பாலம் சீரமைப்புத் தொடர்பாக ரூபா 1,000 மில்லியன் நிதி வரையான மதிப்பீடு செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. தற்போதுள்ள வட்டுவாகல் பாலத்தை அவ்வாறே இருக்க வற்றாப்பளை பக்கமாக குறுகிய நீர்பரப்பில் புதிய பாலம் ஒன்றை அமைப்பது தொடர்பான யோசனைகளும் அத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

கடந்த பத்தாண்டுகளில் வட்டுவாகல் பால சீரமைப்புத் தொடர்பாக தொடர்ச்சியாக ஆராயப்பட்ட போதிலும் இதுவரை பாலம் சீரமைப்பு, புதிய பாலம் அமைப்பு தொடர்பாக எந்தவித முடிவுகளும் கிடைக்கப்பெறவில்லை - என்றனர். (ப-13)




## அக்கராயன் மருத்துவமனைக்கும் பஸ் சேவை இடம்பெறவேண்டும்

கிளிநொச்சி, ஜுலை 28

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு பஸ்கள் வருவது அதிகரிக்கப்பட வேண்டும் என கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சு.தயாபரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி மேற்குக்கான அனைத்து பஸ்களும் அக்கராயன் வழியாகவே பயணிக்கின்றன. எவ்வாறு முழங்காவில் ஆதார மருத்துவமனைக்கு பஸ்கள் செல்வதில்லையோ அதேபோன்ற நிலைமையே அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்குச் செல்லும் [illegible] காலையில் முக்கொம்பனில் இருந்து வரும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் அணைக்கட்டு வழியாக மருத்துவமனை சென்று அக்கராயன், ஸ்கந்தபுரம் வழியாக கிளிநொச்சியை சென்றடையும். யாழ்ப்பாணத்தில் இருந்து காலையில் அக்கராயனுக்கு வரும் பஸ் அக்கராயன் மருத்துவமனை வழியாக திருமுறிகண்டி ஊடாக கிளிநொச்சியைச் சென்றடையும். குறித்த இரு பஸ்களும் கடந்த 18ஆம் திகதி தொடக்கம் பாதை சீரின்மையால் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் முக்கொம்பன், கண்ணகைபுரம் கிராம மக்கள் அக்கராயன் மருத்துவமனைக்கு வருவதில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். ஏற்கனவே அக்கராயன் கிழக்கு, யூனியன்குளம் ஆகிய பகுதி மக்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மேற்குக்கான சேவையில் ஈடுபடுகின்ற பஸ்கள் அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு வந்து திரும்புவதன் மூலம் அம்பலப்பெருமாள் சந்தியில் இருந்து 700 மீற்றர் தூரம் வரையான தூரத்தை நோயாளர்கள் நடந்து செல்வதைத் தவிர்க்கலாம். மகப்பேற்றுக்குரிய பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு நடந்தே செல்கின்றனர்.

எனவே கிளிநொச்சி மேற்குக்கு பயணிக்கின்ற அனைத்து பஸ்களும் மருத்துவமனை வரை பயணிக்க வேண்டும்- என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

உதயன் கல்விப் பிரிவு

**நாகமணி கீதபொன்கலன்,**
ஆசிரியர், (சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி)
(B.A,SPL.TR.SCI,PGDE, MED)

பரீட்சை இலக்கம் 1

**பெயர் :** ......................................

**நேரம் : 1 மணித்தியாலம் 15 நிமிடம்** பகுதி 2

**01) பின்வரும் பந்தியை வாசித்து,கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை எழுதுக**

பச்சைப் பட்டாடை விரித்தாற் போல காட்சி தரும் வயல்வெளிகளும் புல்வெளிகளும் காலை நேரத் தென்றலுக்குத் தலை அசைக்கின்றன. சில்லென வீசும் புதுத்தென்றல் புத்துணர்ச்சியூட்ட பசுக்களும் தாய்ப் பசுவை முட்டி மோதி முந்திக்கொண்டு துள்ளிக் குதித்தோடும் பசுக்கன்றுகளும் புற்றரைகளை நோக்கி விரைந்து செல்கின்றன.

(1) பந்தியிலுள்ள உவமைத்தொடரை எழுதுக. ..........................................

(2) காலை நேரத் தென்றலுக்கு தலை அசைப்பவை எவை?
..........................................

(3) உயர்திணை பெண்பாற் பெயர்ச் சொல்லை எழுதுக?
..........................................

(4) புற்றரைகளை நோக்கி விரைந்து செல்பவை எவை?
..........................................

(5) குணப் பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக?
..........................................

(6) நிகழ்கால வினைச்சொல் ஒன்று தருக?
..........................................

(7) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.
1. புத்துணர்ச்சி : .......................... 2. புற்றரை : ..........................

(8) அடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக?
..........................................

(9) சினைப்பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக?
..........................................

**(02) பின்வரும் பந்தியில் இடம்பெற்றுள்ள நான்கு சொற்களின் எழுத்துக்கள் பிழையாக எழுதப்பட்டுள்ளன. அவற்றை இனங்கண்டு திருத்தி புள்ளிக்கோடிட்ட இடங்களில் எழுதுக.**

அன்று பாடசாலை விடுமுரை. ஐந்தாந் தரத்தில் கல்விகற்கும் கண்ணனுக்கு மட்டில்லாத மகிள்ச்சி. அவன் தன் சக நண்பர்களைத் தேடிச் சென்றான். யாவரும் மாந்தோப்பு ஒன்றில் அவன் வருகைக்காகக் காத்திருந்தனர்

(1) .......................... (2) ..........................
(3).......................... (4)..........................

**(03) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை கூண்டினுள் இருந்து தெரிவுசெய்து உரிய வெற்றிடத்தில் எழுதுக.**

வளி, வலி, வழி

(1) அம்பு பட்ட மான் ...................... யால் துடித்தது
(2) ...................... எங்கும் குன்றும் குழியுமாகக் காணப்பட்டது..
(3) நாம் சுவாசிப்பதற்கு ...................... அவசியமாகும்.

**(04) கீழே சுருக்கமாக எழுதப்பட்டுள்ள நிறுவனங்களின் பெயர்களை விரிவாக எழுதுக.**

(1) இ. மி. ச : ..........................................
(2) அ . ப : ..........................................

**(05) பின்வரும் மூதுரை பாடலைப் பூர்த்தி செய்க.**

நல்லார் ஒருவர்க்குச் செய்த ..........................
கல்மேல் எழுத்துப் போல் காணுமே அல்லாத
.......................... நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
.......................... எழுத்துக்கு நேர்.

**(06) முதலில் தரப்பட்டுள்ள சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(1) உலகம் : (தரணி, எழில், கலப்பை, காடு )
(2) அறிவு : (ஞாலம், சினம், விண், ஞானம் )
(3) களிப்பு : (போர், சமாதானம், இன்னல், உவகை )

**(07) பின்வரும் ஒவ்வொரு உருவிற்கும் பொருத்தமான சொல்லைக் கூண்டினுள் இருந்து தெரிந்து உரிய வெற்றிடத்தில் எழுதுக.**

eating, running, drinking

(1)  (2)  (3) 

.......................... .......................... ..........................

**(08) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.**

உங்கள் கைகளைக் கீழே விடுங்கள் : ..........................................

**(09) பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தைத் தமிழில் (தமிழ் எழுத்துக்களில்) எழுதுக.**

(1) ஒபகே நம குமக்த? : ..........................................
(2) கொஹோமத சப சனீப்ப?: ..........................................

**(10) பின்வரும் வாக்கியங்களின் சிங்கள உச்சரிப்பை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

(1) உங்கள் பாடசாலை எது? : ..........................................
(2) தாமரைப்பூ : ..........................................

**(11) பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.**

(1) துருப்பிடித்த ஆணியொன்று காலில் குத்தினால் ஏற்படும் நோய்?
1) யானைக்கால் நோய் 2) ஏற்புவலி 3)வயிற்றுவலி

(2) நீரைச் சுத்திகரிக்க பயன்படுத்தப்படுவது
1) அயடின் 2) கல்சியம் 3) குளோரின்

(3) ஒருவருடன் நெருங்கிப் பழகும்போது மற்றொருவருக்கும் தொற்றக்கூடிய நோய் எது?
1) கூகைக்கட்டு 2) நீரிழிவு 3) இதயநோய்

(4) முற்றினால் பயனற்றுப் போகும் காய்கறி எது?
1) வெண்டி 2) மிளகாய் 3) தக்காளி

(5) வாழ்நாளில் ஒருமுறை மாத்திரமே பயனைத் தரும் மரம் எது?
1) கத்தரி 2) வாழை 3) பலா

(6) பாம்பொன்று தீண்டியதும் முதலில் செய்ய வேண்டியது.
1) தீண்டிய காயத்தை சவர்க்காரமிட்டு தூய நீரினால் கழுவுதல்.
2) பாம்பை தேடிக் கண்டுபிடித்து கொல்லுதல்
3) காயத்திலிருந்து குருதியை உறிஞ்சி எடுத்தல்.

(7) மிஹிந்து ஊர்வலம் எம் மதத்தவரால் மேற்கொள்ளப்படும்?
1) இந்துக்கள் 2) பௌத்தர்கள் 3) இஸ்லாமியர்கள்

(8) அதிகளவான நீரை உறிஞ்சி வைத்திருக்கும் மண் வகை எது?
1) மணல் மண் 2) இருவாட்டி மண் 3) களிமண்

(9) மின்னேரியாக் குளத்தை கட்டுவித்த மன்னன்?
1) வசபன் 2) மகாசேனன் 3) தாதுசேனன்

(10) வெடித்தலின் மூலம் பரம்பலடையும் வித்து.
1) வேம்பு 2) வெடிபலவன் 3) பலா

(11) மட்டக்களப்பு நகரம் அமைந்திருப்பது.
1) மேற்கு கடலிற்கு அருகில்
2) தெற்கு கடலிற்கு அருகில்
3) கிழக்கு கடலிற்கு அருகில்

(12) உணவு சமைப்பதற்கு மிகப் பொருத்தமானது,
1) களிமண் பாத்திரம் 2) அலுமினியப் பாத்திரம் 3) செப்புப் பாத்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(13) A,B,C உருக்களில் காட்டப்பட்டுள்ள விளையாட்டுக்களை ஒழுங்குமுறைப் படுத்தி எழுதினால் கிடைப்பது,



(1) காற்பந்தாட்டம், வலைப்பந்து, கரப்பந்தாட்டம்
(2) காற்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்து
(3) கரப்பந்தாட்டம்,காற்பந்தாட்டம் , வலைப்பந்து

(14) 

இவ்வீதி சமிக்ஞையின் மூலம் கருதப்படுவது,
(1) முன்னே ஓர் வைத்தியசாலை உள்ளது.
(2) முன்னே ஓர் கிறிஸ்தவ தேவாலயம் உள்ளது
(3) முன்னே ஓர் நாற்சந்தி உள்ளது.

(15) சீனியைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் தாவரம்,
(1) கரும்பு (2) அன்னாசி (3) தோடம்பழம்

(16) இலங்கையில் இயற்கைத் துறைமுகம் அமைந்திருப்பது,
(1) அம்பாந்தோட்டையில் (2) கொழும்பில் (3) திருகோணமலையில்

(17) சமையலறையில் அரிசியிலிருந்து தேவையற்ற பொருட்களை நீக்குவதற்காகப் பயன்படுத்தும் உபகரணம்,

(1)  (2)  (3) 

(18) காட்டில் வழி தவறிய நபரொருவருக்கு காட்டிலிருந்து வெளியே வருவதற்கு மிகவும் அவசியமான உபகரணம்,
(1) மின்சூள் (2) சப்பாத்துக்கள் (3) திசையறி கருவி

(19) ஏப்ரல் மாதத்தில் பூக்கும் சிவப்பு நிறப் பூ,
(1) முள்முருங்கை (2) கடுபுல் (3) கொன்றை

(20) "மழைக்குருவி" தனது வீட்டை அமைத்துக்கொள்வது,
(1) தும்புகளினால் (2) மரங்களிலுள்ள இலைகளினால்
(3) களிமண்ணினால்

(21) பிரித்தானியர்கள் இலங்கையை முழுமையாகக் கைப்பற்றிய ஆண்டு
(1) 1948 (2) 1815 (3) 1972

(22) 

இவ்வுருவில் காணப்படும் தேசிய வீரர்.
(1) கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா
(2) ஆதர். சி. கிளாக்
(3) சேர். டீ.பி.ஜயதிலக

A: | தெ வ | வ தெ |

B: | வ தெ | வ தெ |

(23) இரண்டு காந்தக்கோல்கள் ஒன்றுக்கொன்று அருகில் வைக்கப்பட்டுள்ள முறையை A,B ஆகிய இரு சந்தர்ப்பங்களும் காட்டுகின்றன. அதன்படி,பின்வரும் கூற்றுக்களுள் மிகச் சரியானக் கூற்றைத் தெரிக.
(1) சந்தர்ப்பம் A தள்ளும், சந்தர்ப்பம் B கவரும்
(2) சந்தர்ப்பம் A கவரும், சந்தர்ப்பம் B தள்ளும்
(3) A,B ஆகிய இரு சந்தர்ப்பங்களும் தள்ளும்.



(24) இவ்வுருவில் புலப்படுவது சூரியநமஸ்காரப் பயிற்சியில் எத்தனையாவது சந்தர்ப்பம்?
(1) முதலாம் சந்தர்ப்பம்
(2) இரண்டாம் சந்தர்ப்பம்
(3) மூன்றாம் சந்தர்ப்பம்



(25) 

இந்த இலையை உடைய கொடிவகை,
(1) முடக்கொத்தான்
(2) வற்றாளை
(3) கொடித்தோடை

(26) சரியான ஒலிம்பிக் இலச்சினையானது

(1)  (2)  (3) 

(27) சங்கிலித் தையலைக் காட்டும் உரு.

(1)  (2)  (3) 

(28) 

இந்த இலச்சினை காணக்கிடைப்பது,
(1) எமது உடலிற்கு நஞ்சாகக்கூடிய பதார்த்தங்களைக் கொண்டுள்ள போத்தல்களிலாகும்.
(2) தீவிர சிகிச்சையிலுள்ள நோயாளர்கள் குடிக்கும் மருந்து போத்தல்களிலாகும்.
(3) விற்பனை நிலையங்களில் விற்பனைக்காக உள்ள மென்பானப் போத்தல்களிலாகும்.

(29) நீரில் வளரும் தாவரம்,
(1) நாகதாளி (2) இஞ்சி (3) ஐதரில்லா

(30) இவ்வுருவில் காட்டப்படும் இலச்சினைக்குரிய நிறுவனம்,



(1) இலங்கை மின்சார சபை
(2) இலங்கை தபாற் திணைக்களம்
(3) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

**12) பின்வரும் ஒவ்வொரு வினாவிற்குமுரிய விடையைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(1) IX + X இன் பெறுமானத்தை உரோமன் எண்களில் எழுதுக. ...............


(2) கோளமொன்றில் உள்ள உச்சிகளின் எண்ணிக்கை, விளிம்புகளின் எண்ணிக்கை, முகங்களின் எண்ணிக்கை என்பவற்றை எழுதுக.
(1) உச்சிகள் :.......... (2) விளிம்புகள் :........ (3) முகங்கள் : .........

(3) ஒரு பழம் ரூபா 12.50 எனின் 14 பழங்களின் விலையைக் காண்க.
.......................................

(4) சாக்கொன்றில் 80 கிலோ கிராம் அரிசி இருந்தது. அதில் 2/5 பங்கு விற்கப்பட்டது. அதன்படி, தற்பொழுது சாக்கில் மீதியாகவுள்ள அரிசியின் அளவை கிலோகிராமில் எழுதுக. .........................................

(5) பிள்ளையொன்று இரு கைகளையும் இரு பக்கமாக நீட்டியவாறு தென்கிழக்குத் திசையைப் பார்த்துக்கொண்டிருந்தது.அதன்படி அவரது வலது கை திரும்பியிருக்கும் திசை யாது? ..........................................

(6) 3,6,12, 24, ☐ எனும் எண்கோலத்தில் அடுத்து வரவேண்டிய எண்ணை வெற்றுக் கூண்டினுள்ளே எழுதுக.

(7) 

2kg 250g A 750g

இத் தராசு சமநிலையில் உள்ளது எனின், A படியின் நிறை யாது?
.......................................

(8) 3 லீற்றர் 500 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய ஒரு பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு 500 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய பாத்திரமொன்றினால் எத்தனை தடவைகள் நீர் ஊற்றுதல் வேண்டும்?
.......................................

(9) 3 மீற்றர் நீளமான கம்பியிலிருந்து 50cm ஆகுமாறு சமநீளமான கம்பித்துண்டுகள் எத்தனை வெட்டலாம்? ...........................

(10) $\frac{2}{3}$ எனும் பின்னத்தின் சமவலுப் பின்னம் ஒன்றை எழுதுக.
...........................

(11) நான் விற்பனை நிலையத்திற்குச் சென்று புத்தகமொன்றை வாங்கிக் கொண்டு வியாபாரியிடம் 50.00 ரூபா தாளைக் கொடுத்த போது, வியாபாரி மீதிப் பணமாக 5.00 ரூபா நாணயங்கள் 2 உம், 50 சத நாணயங்கள் 8 உம் தந்தார்.அதன்படி புத்தகத்தின் விலை யாது?
.......................................

(12) நான் ¼ மணித்தியாலம் கணிதமும், ½ மணித்தியாலம் சுற்றாடலும், ¾ மணித்தியாலம் ஆங்கிலமும் படித்தேன். அதன்படி நான் படித்த மொத்த நேரத்தை நிமிடங்களில் எழுதுக. ...........................

(13) 8967 இல்,
(1) இலக்கம் 8 உள்ள இடப்பெறுமானம் யாது? ..................
(2) இலக்கம் 9 இன் பெறுமானம் யாது? ..................

(14) 250 g சீனியின் விலை ரூபா 35.00 எனின் 1kg சீனியின் விலை யாது? ...........................

(15) ஒருவருக்கு 2 பலூன்கள் வீதம் 150 பலூன்களை எத்தனை பேருக்குக் கொடுக்கலாம் ? ........................................

**(13) "எமது நாட்டிலுள்ள பிள்ளைகளின் எதிர்காலம் கருதி அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலவசக் கல்வியின் உச்ச பயனைப் பெறுவோம்" எனும் தலைப்பின் கீழ்ப் பொருத்தமான மூன்று வாக்கியங்களை எழுதுக.**
**( ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இடம்பெற வேண்டும்.**
**எழுவாய், பயனிலைத் தொடர்புகள் எழுத்துக்கூட்டல் ஆகியன சரியாக இருக்கவேண்டும்.)**

1. .......................................
.......................................

2. .......................................
.......................................

3. .......................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஹர்பஜன் சிங்கின் 'பிரண்ட்ஷிப்' முடிவடைந்தது

கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங் ஹீரோவாக அறிமுகமாகும் படம் 'பிரண்ட்ஷிப்'. இந்த படத்தை ஜான் பால்ராஜ் மற்றும் ஷாம் சூர்யா இணைந்து இயக்குகின்றனர். இதில் ஹர்பஜன் சிங்குக்கு ஜோடியாக பிக்பாஸ் பிரபலம் லாஸ்லியா நடிக்கிறார். மேலும் அர்ஜுன், காமெடி நடிகர் சதீஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்கள். உதயகுமார் இசையமைத்துள்ள இப்படத்துக்கு சாந்தகுமார் ஒளிப்பதிவு செய்துள்ளார். தமிழில் உருவாகும் இப்படத்தை இந்தி, பஞ்சாபி, தெலுங்கு உள்ளிட்ட மொழிகளிலும் டப்பிங் செய்து வெளியிட உள்ளனர். இந்நிலையில், ஹர்பஜன் சிங் நடிக்கும் காட்சிகளின் படப்பிடிப்பு முடிவுக்கு வந்துள்ளது. விரைவில் அவர் டப்பிங் பணிகளை தொடங்க உள்ளாராம்.

இப்படத்தின் டிரெய்லர் இந்த மாத இறுதியில் வெளியிடப்பட உள்ளதாக படக்குழு தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## சரிவுகளை சாதனை பாதையாக மாற்றிய

# எலான் மஸ்க்



டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் CEOவாக இருக்கும் எலான் மஸ்க், உலகின் 'நம்பர் 1' பணக்காரராக இருந்த அமேசான் நிறுவனர் ஜெப் பெஸோசனை பின்னுக்குத்தள்ளி முதலிடத்துக்கு உயர்ந்துள்ளார். நம்பிக்கை உள்ளவன் தோல்வியில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு நிச்சயம் வெற்றியடைவான். ஒருபோதும் சோர்ந்துபோகவோ, ஒதுங்கிவிட வேண்டும் என்றோ எண்ணிப்பார்க்கமாட்டான். அதற்கு, நிறைய பேர் உதாரணமாக இருந்தாலும், இன்றைய உதாரணம் டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் CEOவாக இருக்கும் எலான் மஸ்க் தான். வாழ்க்கையில் சந்தித்த அனைத்து சவால்களையும், தனது புத்திக் கூர்மையாலும், விடாமுயற்சியாலும் வென்று இன்று உலகின் நம்பர் 1 பணக்காரராக உயர்ந்துள்ளார்.

அவரின் இன்றைய சொத்து மதிப்பு 180 மில்லியன் டொலருக்கும் மேல் என கணக்கிட்டுள்ளது ப்ளூம்பெர்க் நிறுவனம். 2020ம் ஆண்டு தொடக்கத்தில் உலக பணக்காரர்கள் பட்டியலில் 35வது இடத்தில் இருந்த அவர் ஒரே ஆண்டில் அசுர வளர்ச்சி பெற்று முதல் இடத்தைப் பிடித்துள்ளார். இது எப்படி சாத்தியமானது?. தென் ஆப்பிரிக்காவில் பிறந்த எலன் மஸ்க், சிறுவயதில் இருந்து சுறுசுறுப்பாகவும், புத்திக்கூர்மையாகவும் செயற்படக் கூடியவராக இருந்துள்ளார். அவரின் இந்த ஆற்றல் இயல்பாகவே டெக் துறைக்கு இழுத்துச் சென்றது.

இவர் பள்ளிப்படிப்பை கனடா மற்றும் அமெரிக்காவில் முடித்தார். 12 வயதிலேயே 'Blaster' என்ற வீடியோ கேமை வடிவமைத்து, அதனை PC and Office Technology என்ற இதழிடம் 500 டொலருக்கு விற்றார். 25 வயதில் சகோதரருடன் இணைந்து Zip2 என்ற ஆன்லைன் விளம்பர நிறுவனத்தைத் தொடங்கி, Compaq நிறுவனத்திடம் 307 மில்லியன் டொலருக்கு விற்றார். இதன்மூலம் லட்சாதிபதியாக உயர்ந்தார்.

பின்னர் அதனை ebay நிறுவனத்துக்கு 1.5 பில்லியனுக்கு 2002ம் ஆண்டு விற்பனை செய்தார். அதில் கிடைத்த பணத்தை SpaceX நிறுவனத்திலும், டெஸ்லா நிறுவனத்திலும் முதலீடு செய்தார். அப்போது பேசிய அவர், "டெஸ்லாவின் வெற்றி உலகின் எதிர்காலத்துக்கு மிகவும் அத்தியாவசியமானது" என்றார். அவரின் ஆளுமைத் திறன், அயராத உழைப்பு, தான் நம்பிக்கை கொள்ளும் விஷயத்தில் உறுதியாக இருப்பது போன்ற காரணங்களால், டெக் ஜாம்பவானாகவும், உலகின் நம்பர் ஒன் பணக்காரராகவும் இருக்கிறார். அவரின் இத்தகைய வளர்ச்சியில் டெஸ்லாவின் வளர்ச்சியும் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. சாதனைகள் அனைத்தையும் ஒரே நாளில் அவர் அடைந்துவிடவில்லை. அதற்காக பல்வேறு கடும் சோதனைகளையும் எதிர்கொண்டு இருக்கிறார்.

அகரன்@i_akaran

செத்ததுக்கு அப்புறம், நாம வெறும் சாம்பலா மட்டும் இருக்கக்கூடாது, சாம்பிளாவும் இருக்கணும்.!

ReenaHeart exclamation

எதை தேடனாலும்
பொறுமையாக தேடு
பொறாமையின்றி....

கோழியின் கிறுக்கல்!!

தோல்விகளுக்கப்
பொறுப்பேற்றுக் கொள்ளாத
தலைவன்,
வெற்றிகளுக்கு மட்டும்
பொறுப்பேற்பது
மொள்ளமாறித்தனம்!!



## கலாம் பொன்மொழிகள்

- உங்கள் கனவு நிறைவேறுவதற்கு முதலில் நீங்கள் கனவு காணவேண்டும்
- நீங்கள் இறக்கைகளோடு பிறந்தவர்கள், தவழாதீர்கள். மேலே மேலே பறக்க அதனை உபயோகிக்க கற்றுக்கொள்ளுங்கள்
- மனிதர்களுக்கு கஷ்டங்கள் தேவை, ஏனென்றால் மகிழ்ச்சியை அனுபவிக்க அவை தான் காரணம்
- வாழ்க்கையில் ஏற்ற இறக்கங்களை சந்தித்தாலும், சிந்திப்பதை நிறுத்தாதே.. அதுதான் மூலதனம்
- சூரியனை போல ஒளிர வேண்டுமென்றால் முதலில் சூரியனை போல எரிய வேண்டும்



# இன்றைய நாள்

**மேடம்:** எதையும் யோசித்துச் செய்ய வேண்டிய நாள். வீண் பேச்சு வேண்டாம். தன்னம்பிக்கையும் தைரியமும் குறையாமல் கவனமாக இருங்கள். வெளிநாட்டில் வாழும் உறவினரிடமிருந்து தகவல் தேடி வரும்.

**இடபம்:** ஒற்றுமை காரணமாகக் குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். எதிர்பார்த்த லாபம் வரும், பிரியமானவர்கள் பாராட்டுவர். எதிரிகளை விட்டு விலகிச்செல்ல முயற்சி செய்வீர்கள்.

**மிதுனம்:** எந்த விஷயத்தையும் முனைப்புடன் செய்து முடிப்பீர்கள். தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சியைத் தரும். கடன் தீரும். மனதில் மகிழ்ச்சி உண்டு.

**கடகம்:** காதலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி உண்டு. விடாமுயற்சியால் வெற்றி கிடைக்கும். இளைஞர்கள் உற்சாகமுடன் செயற்படுவர். கொடுக்கல் வாங்கல் சிறப்பாக இருக்கும். ரகசிய சேமிப்பு உயரும்.

**சிம்மம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும். புதிய விஷயம் கற்பீர்கள். வீட்டில் கடன் சுமையைக் குறைக்க பொறுப்புடன் பாடுபடுவீர்கள் எடுத்த முயற்சியை வெற்றிகரமாக முடித்து விடுவீர்கள்.

**கன்னி:** இளைஞர்களின் முயற்சிகளில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். குழந்தைகள் நடவடிக்கைகளில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். பயம் ஒன்று முடிவுக்கு வரும்.

**துலாம்:** பணிச்சுமை குறையும். மனக்கவலை நீங்கி நிம்மதி பிறக்கும். விரயங்கள் அதிகரிக்கும். புதிய முயற்சி எளிதில் முடியும். கட்டுப்பாடுகள் காரணமாக எரிச்சல் வேண்டாம்

**விருச்சிகம்:** அலுவலக வேலைகளில் திட்டமிட்டு செயற்பட்டு நிம்மதியடைவீர்கள். வெளிநாடு செல்ல முயல்பவர்கள் வெற்றி கிடைக்கப் பெறுவர். செயலில் அக்கறை காட்டுவது நல்லது.

**தனுசு:** கடந்த நாட்களில் இருந்த மன உளைச்சல் நீங்கும். வீண் விரயம் அதிகரிக்கும். திட்டமிட்ட பணிகளை எளிதில் முடிப்பீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும்.

**மகரம்:** சுபவிஷய பேச்சில் நல்ல முடிவு கிடைக்கப் பெறுவீர்கள். திடீர் திருப்பம் ஏற்படும். சந்திக்க விரும்பிய நபரைச் சந்திப்பீர்கள். பகைவர்கள் அன்புக்குரியவராக மாறி வருவர்.

**கும்பம்:** சக ஊழியர்களின் ஆதரவை உதாசீனம் செய்ய வேண்டாம். மன உளைச்சல் நீங்கி மகிழ்ச்சி நிலவும். சுபவிஷயத்தில் அனுகூலம் உண்டு.

**மீனம்:** தனிப்பட்ட விஷயங்களை யாரையும் நம்பிப் பகிர வேண்டாம். வெளியூரிலிருக்கும் மகன் / மகள் ஆதரவாகச் செயல்படுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சீனப் பிரதமர் இலங்கைக்கு வருகின்றார்

கொழும்பு,ஜூலை 28

சீனப் பிரதமர் லீ கெக்யோங் எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி, இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைக்கு வரவுள்ளார்.

இதன் போது ஜனாதிபதி கோத்தாபாயராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன் கொழும்பு துறைமுக நகரின் அடுத்தகட்ட செயற்பாடுகள் தொடர்பிலும் ஆராயவுள்ளார். கொழும்பு துறைமுக நகர் நிர்வாக ஆணைக்குழு விவகாரம் மற்றும் சீனாவின் பொறுப்புகள் என்பது குறித்து உறுதியான தீர்மானங்களும் எடுக்கப்படும். அதற்கான ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

# விக்னேஸ்வரன் வழக்கு தொடர்வது உண்மைகளை வெளிக்கொணரும்

### கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூலை 28**

**வடக்கு மாகாண பிரதம செயலாளரின் நியமனம் சம்பந்தமாக விக்னேஸ்வரன் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவிருப்பது உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்குப் பொருத்தமானதாக அமையுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையகத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில்;

இன்று வடகிழக்கில் தாங்களும் தேசியவாதிகள் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோர் மக்களை ஏமாற்றி ஏதோ மாகாண சபை முறைமையில் உண்மையில் அதிகாரங்களிருக்கின்றன. ஆனால், நாங்கள் ஏமாற்றப்பட்டு அந்த அதிகாரங்களை அனுபவிப்பதற்கு அரசு மறுக்கிறது என்ற பொய்யைச் சொல்லி இன்னும் இன்னும் தமிழ்மக்களை இந்த மாகாணசபை முறைமைக்குள் விரும்பி முடக்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தவகையில்தான் வடக்கு மாகாண புதிய பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள வவுனியா மாவட்ட செயலராக இருந்த சமன் பந்துலசேனவின் நியமனத்துக்கு எதிராகவும், வடக்கு மாகாணப் பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக்கும் வகையில் மத்திய அரசின் கீழ் கொண்டுசெல்வதற்கு எதிராகவும், வடக்கு மாகாண மருத்துவமனைகளை மத்திய அரசின் கீழ் கொண்டுசெல்லும் முயற்சிக்கு எதிராகவும் வடக்கு கிழக்கில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிகளால் வெளியிடப்படும் கண்டனங்கள், ஒப்பாரிகள் அனைத்தையும் நாங்கள் பார்க்கின்றோம்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தின் புதிய பிரதம செயலாளரின் நியமனம் சம்பந்தமாக வடக்கு மாகாணத்தின் அதிகாரத்தை அரசு பிழையாகப்பாவிக்கின்றது என்ற கோணத்தில் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளேன் என்று விக்னேஸ்வரன் கூறியிருக்கின்றார். இதற்கு முன்னரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் செயலாளரொருவரின் நியமனம் சம்பந்தமாக நீதிமன்றங்கள் ஊடாகச் சென்று வாதாட வேண்டியிருந்தது. அதிலும் விக்னேஸ்வரன் தோற்றுப்போனவர். சிலவேளை தற்போது அவர் அதனை மறந்துவிட்டாரோ தெரியவில்லை. திரும்பவும் அவர் வடக்கு மாகாண பிரதம செயலாளரின் நியமனம் சம்பந்தமாக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளார் என தெரிவித்திருக்கின்றார். அவர் இவ்வாறு மீண்டும் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதனால் செய்யட்டும். இந்த அரசமைப்பு ஒரு ஒற்றையாட்சி. இந்த ஒற்றையாட்சியில் முழு அதிகாரமும் மத்திய அரசிடம் தானிருக்கிறது என்பதை மீண்டும் மீண்டும் உச்சநீதிமன்றத்தில் வலியுறுத்துவதற்கு இந்தச் சந்தர்ப்பம் நல்லதொரு வாய்ப்பாக அமையும். உண்மையில் தமிழ் மக்களுக்கு வடக்கு மாகாண சபையில் எந்தவொரு அதிகாரமும் இல்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இதற்கான தீர்ப்பு அமையும்- என்றார். (ப-26)

## முன்னணிக்கு பதில் ஈ.பி.டி.பி

சாவகச்சேரி, ஜூலை 28

சாவகச்சேரி நகரசபையின் பிரதேச அபிவிருத்தி உதவித்திட்ட பெறுகைக்குழுவின் உறுப்பினராக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர். ந.திருக்குமரன் சபை உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

குழுவில் உறுப்பினராக இருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர். ப.ஜெயகாந்தன் உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதையடுத்து புதிய உறுப்பினர் நேற்று நடைபெற்ற சபையின் விசேட அமர்வில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார். (ப-9)

## போலி ஆவணங்களை தயாரித்தாரென ஒருவர் கைது

கொழும்பு,ஜூலை 28

அடையாள அட்டை உள்ளிட்ட போலியான ஆவணங்களைத் தயாரித்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிரிபத்கொட வீவெல்துவ பிரதேசத்தில், சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவரிடமிருந்து 5 போலி அடையாள அட்டைகள், போலி வாகன அனுமதிப்பத்திரம், 5 அச்சு இயந்திரங்கள், 90 லெமினேட் கடதாசிகள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன. (ஒ.4)

தொழில் போட்டி

## காதைக் கடித்து துப்பிய ரெய்லர்

சாவகச்சேரி, ஜூலை 28

தொழில் போட்டி காரணமாக ஒரு ரெய்லரின் காதைக் கடித்து துப்பியுள்ளார் மற்றொரு ரெய்லர். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது. சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள தையலகத்தில் வேலை செய்து கொண்டிருந்த வேளையில் உள்ளே சென்றவர் காதைக் கடித்துள்ளார்.

காதிலிருந்து குருதி வெளியேறிய மற்றைய ரெய்லர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக. நேற்று முன்தினம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ப-9)

## விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, ஜூலை 28

வீதி விபத்தில் காயமடைந்த குடும்பத்தலைவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மறவன்புலவில் இடம்பெற்றுள்ளது. குறித்த குடும்பத்தலைவர் வீதி வளைவில் மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் வீழ்ந்து காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இதே இடத்தைச் சேர்ந்த மணிக்கம் வினித் (வயது 34) என்பவர் இவ்வாறு காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ப-9)

## மோசமான பொருளாதார நாடுகளில் இலங்கையும்

### ஐ.ம.சக்தி எதிர்வுகூறல்

கொழும்பு,ஜூலை 28

உலகளாவிய ரீதியில் மோசமான பொருளாதாரத்தைக் கொண்டிருக்கும் நாடுகளாக பெயரிடப்பட்டிருக்கும் கியூபா, கொங்கோ மற்றும் மொசாம்பிக் ஆகிய நாடுகளின் பட்டியலில், இலங்கையும் இணையப்போகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை வெகுவிரைவில் உணவுப்பொருள்கள், மருந்துப் பொருள்கள் மற்றும் எரிபொருள்கள் ஆகியவற்றின் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுக்கும். தற்போதைய அரசு ஆட்சிபீடமேறி சுமார் ஒன்றரை ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இருப்பினும் இந்த அரசின் கொள்கை ரீதியான குறைபாடுகள் மற்றும் செயற்றிறனற்ற நிர்வாகம் ஆகியவற்றின் காரணமாக நாட்டு மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசின் முறையற்ற பொருளாதார நிர்வாகத்தின் காரணமாக கடன் மீளச்செலுத்தும் இயலுமை, முதலீடு உள்ளிட்ட அனைத்துக் காரணிகளிலும் இலங்கை பின்னடைவைச் சந்தித்துள்ளது. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில், தற்போது அரசு பெறும் வருமானங்களையும் விட, அதன் செலவினங்கள் உயர்வாகக் காணப்படுகின்றன.

இவற்றின் காரணமாக நாட்டின் பொருளாதாரம் தற்போது வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. அதேவேளை வெளிவிவகார அமைச்சு அமைந்துள்ள இடம், ஹில்டன் ஹொட்டல், இலங்கை வங்கிக்குச் சொந்தமான இடம், விமானப்படைக்குச் சொந்தமான இடம் உள்ளடங்கலாக கொழும்பிலுள்ள பெறுமதி வாய்ந்த காணிகளை சஹஸ்ர மற்றும் செலெந்திவா நிறுவனங்களின் ஊடாக வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளிலும் அரசு ஈடுபட்டுள்ளது- என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 66.4 வீதமான மக்கள் அரசுமீது அதிருப்தி

கொழும்பு, ஜூலை 28

**அத்தியாவசியப்பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துவதில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில், 66.4 வீதமான மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நாட்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சுகாதாரநலன், வாழ்வாதாரம், கல்வி, சமூக உறவுகள் ஆகியவை உள்ளடங்கலாக பல்வேறு விடயங்களிலும் ஏற்பட்ட தாக்கங்கள் மற்றும் இந்த நெருக்கடி கையாளப்பட்ட விதம் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் கண்ணோட்டத்தை அறிந்துகொள்ளும் நோக்கிலான ஆய்வொன்று மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆய்வானது பல்வேறு விடயப் பரப்புகளின் கீழ் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தைப் பயன்படுத்தி, நாட்டின் 25 மாவட்டங்களிலுள்ள முக்கிய நான்கு இனச்சமூகங்களையும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற சமூகங்களையும் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய 1000 பேரை மையப்படுத்தி முன்னெடுக்கப் பட்டுள்ளது.

அதன்மூலம் பெறப்பட்ட விவரங்களை அடிப்படையாகக்கொண்டு வெளியிடப்பட்டிருக்கும் முதலாவது அறிக்கையில் கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியைக் கட்டுப்படுத்தும் விவகாரத்தில் பொதுமக்களின் திருப்தி மட்டம், நபர்களை நியாயமாக நடத்துதல், சமூகங்களுக்கிடையிலான உறவுகள், கொரோனா வைரஸ் தொற்றுப்பரவல் பற்றிய விழிப்புணர்வு, அது குறித்த தகவல்களைப் பெறக்கூடிய மூலாதாரங்கள், வருமான வீழ்ச்சியின் விளைவுகளைக் கையாள்வதற்கான உத்திகள், கல்வி மற்றும் சுகாதார சேவையின் நிலை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பொதுமக்களின் கண்ணோட்டம் எவ்வாறானதாக அமைந்துள்ளது என்பது குறித்த விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (த-இ)

# இலங்கைக்கு கடல் மார்க்கமாக போதைப்பொருள்கள் கடத்தல்

## விரைவில் விசேட சுற்றிவளைப்பு

கொழும்பு,ஜூலை 28

இலங்கைக்கு கடல் மார்க்கமாகவே பெருமளவில் போதைப் பொருள்கள் கொண்டுவரப்படுகின்றன. அதனால் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் எதிர்வரும் நாள்களில் விசேட சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொலிஸாரால் போதைப்பொருளுடன் தொடர்புடைய சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினால் எதிர்வரும் நாள்களில் விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

**ஒருபுறம் போதைப்பொருள் பாவனைக்கு நபர்கள் அடிமையாவதைத் தடுப்பதற்கும், மறுபுறம் இலங்கைக்கு போதைப்பொருள் கிடைக்கப்பெறுகின்ற வழிகளை இல்லாதொழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.**

இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் இலங்கைக்கு கடல் மார்க்கமாகவே, பெருமளவில் போதைப் பொருள்கள் கொண்டுவரப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

குறிப்பாக ஹெரோய்ன் போதைப்பொருள் தென் கடல் மார்க்கத்தின் ஊடாகவும் , வடக்கு கடல் மார்க்கத்தின் ஊடாக கேரளா கஞ்சாவும் கொண்டு வரப்படுகின்றன.

இவ்வாறு இலங்கைக்கு போதைப் பொருள் கொண்டு வரப்படுவதைத் தவிர்ப்பதற்காக, ஏனைய தரப்பினருடன் இணைந்து பல சுற்றிவளைப்புக்களை முன்னெடுப்பதற்கு தயார்ப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு , விசேட அதிரடிப்படையினர் மற்றும் பிரதேச பொலிஸார் இணைந்து பரந்தளவிலான சுற்றிவளைப்புக்களில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,4)

# மீனவர் சமூகத்துக்கு பைஸர் தடுப்பூசி

கொழும்பு, ஜூலை 28

இலங்கைக்கு நான்காவது கட்டமாகக் கிடைக்கப் பெற்றுள்ள பைஸர் தடுப்பூசியின் ஒரு தொகுதி டோஸ்கள் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் சமூகத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தொழில் நிமிர்த்தம் வெளிநாடு செல்ல எதிர்பார்த்துள்ளவர்களுக்கும், உயர்கல்விக்காக வெளிநாடு செல்லவுள்ள மாணவர்களுக்கும் இந்தத் தடுப்பூசி செலுத்தப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதம் பைஸர் தடுப்பூசியை அவசர பயன்பாட்டுக்கு உபயோகிப்பதற்கு இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் அனுமதி வழங்கியது.

இந்தத் தடுப்பூசியில் முதற்கட்டமாக 26 ஆயிரம் டோஸ்களும், இரண்டாம் கட்டமாக 26 ஆயிரம் டோஸ்களும், மூன்றாம் கட்டமாக 70 ஆயிரத்து 200 டோஸ்களும், நான்காம் கட்டமாக 90 ஆயிரம் டோஸ்களும் கிடைக்கப் பெற்றன. அஸ்ராஜெனகா தடுப்பூசியை முதல் டோஸாகப் பெற்றுக்கொண்டவர்களுக்கு இரண்டாம் டோஸாக பைஸர் தடுப்பூசியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்தத் தீர்மானம் கைவிடப்பட்டது. (ஒ,4)

# தனிமைப்படுத்தலை மீறுவோரை கண்காணிக்க 10,000 பொலிஸார்

கொழும்பு,ஜூலை 28

நாடு முழுவதும் தற்போது நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுவோரைக் கண்காணிப்பதற்கு 10 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரை 52 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தல் விதிகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் மற்றும் மேல் மாகாணத்துக்குள் வாகனங்கள் பிரவேசிக்கின்ற 13 இடங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை மீறிய வாகனங்கள் திரும்பி அனுப்பப்பட்டுள்ளன.

அத்துடன் முகக்கவசம் அணியாமலும் , முகக்கவசத்தை முறையாக அணியாமலும் பலர் நடமாடுகின்றமை புலனாய்வுப் பிரிவினரின் கண்காணிப்புக்களில் தெரியவந்துள்ளது.

அதன் காரணமாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் விசேட கண்காணிப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. என்றார். (ஒ.4)

# பெண்கள்,சிறுவர்களுக்கு பாதுகாப்பு சட்டங்களை வலுப்படுத்த வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு,ஜூலை 28

**இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில், நடைமுறையிலிருக்கும் சட்டங்களில் குறைபாடுகள் உள்ளன. எனவே அந்தச் சட்டங்களை மேலும் வலுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகளிர் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்புக்கு எமது நாட்டில் உயர்ந்தபட்ச முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். இருப்பினும் அண்மைக்காலங்களில் பதிவாகியுள்ள சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.



பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் தற்போது நடைமுறையிலிருக்கும் கொள்கைகள் மற்றும் சட்டத் திட்டங்களில் காணப்படும் குறைபாடுகளே இதற்கு முக்கிய காரணமாகும்.

இந்த விடயம் தொடர்பில் நாட்டில் காணப்படும் சட்டவரையறைகள் எவ்வகையிலும் போதுமானவை அல்ல. எனவே அவற்றை மேலும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதன்மூலம் பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறைகளையும், துஷ்பிரயோகங்களையும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

இந்த விவகாரம் தொடர்பில் நாட்டில் தற்போது நடைமுறையிலிருக்கும் சட்ட திட்டங்களை மேலும் வலுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஐக்கிய மக்கள் சக்தி உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது- என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாணத்தில் கொரோனா அபாயம்

கொழும்பு, ஜூலை 28

**கொரோனா வைரஸ் பரவலில் மேல் மாகாணம் அபாய வலயமாக உள்ளது என்று அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**



அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 'வீட்டிலே இடம்பெறுகின்ற கொரோனா மரணங்கள், அதேபோன்று மரணங்களின் போதான கிரியைகள் எவ்வாறு இடம்பெற வேண்டும் என்று சுகாதாரத்துறையின் அறிவுறுத்தியுள்ளனர். இவ்வாறிருக்க பிரபல ஊடக நிறுவனமொன்றின் தலைவரது மரணம் அண்மையில் சம்பவித்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் பலர் அவரது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டிருந்தனர். அவர்கள் பாதுகாப்பு கவசம், உடைகளை அணிந்திருக்கவில்லை. இவ்வாறான விடயங்களுக்கு இடமளிப்பதா? இது ஒரு விமர்சனத்துக்குரிய விடயமாக மறிவிட்டதே?' என்று குறித்த ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், 'நீங்கள் கண்ட காட்சிகளில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவியுங்கள். கொரோனாத் தொற்று பரவல்களுக்கான சாத்தியக்கூறுகள் அங்கு நடந்திருப்பின் அது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவியுங்கள்' என்றார்.

'டெல்டா வைரஸ் தொற்று ஒவ்வொரு மாவட்டத்திலும் சராசரியாக 30 வீதத்தினருக்கு இருக்கின்றது. தடுப்பூசிகள் இரண்டும் செலுத்தப்பட்டவர்களும் கொரோனாத் தொற்றால் மரணிக்கின்றனர்.

இது தொடர்பில் விரிவான அறிக்கையை சமர்ப்பிக்க முடியுமா?' என மற்றுமொரு கேள்வி கேட்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், 'இவ்விடயம் தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவித்துள்ளோம். இந்த விரிவான அறிக்கைகளை அவ்வப்போது ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தியோ, நடத்தாமலோ வெளியிட வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. அந்த வேண்டுகோளை விடுத்துள்ளோம். செய்திகளினூடாக அவர்கள் அதனைத் தெரிவிக்க வேண்டும்.

தடுப்பூசி செலுத்துவதின் முன்னேற்றம் குறித்து தெரிவிக்க வேண்டும். அதேபோன்று தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களில் எவருக்காவது தொற்று ஏற்பட்டிருந்தால் அது தொடர்பான விளக்கத்தை வழங்க வேண்டும். இரண்டாவது தடுப்பூசி வழங்கப்பட்டமை குறித்து விரிவான விளக்கத்தை வழங்க வேண்டும்.

30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அதனால் தொற்று ஏற்படும் நிலைமையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஆனால், மேல் மாகாணம் ஓர் அபாய வலயமாக இருப்பதால் கூடுதலாக கவனம் செலுத்தி வருகின்றோம். அங்கே பெரும்பாலானவர்களுக்குத் தடுப்பூசி வழங்குவதில் வெற்றிக்கண்டுள்ளோம்' என்றார். (ம-22)



பனை அபிவிருத்திச் சபையால்

## 900,000 பனம்விதை நடுவதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

பனை அபிவிருத்திச் சபையால் ஆண்டுதோறும் முன்னெடுக்கப்படும் பனம் விதை நடுகைச் செயற்றிட்டத்தின் கீழ் இந்த வருடம் 9 லட்சம் பனம் விதைகளை நடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் மாவட்டத்திலும் 4 லட்சம் பனம் விதைகள் நேரடியாக நடுகை செய்யப்படவுள்ளன. அதேநேரம் யானை வேலி செயற்றிட்டத்துக்கு என 5 லட்சம் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன. இதற்காக 4.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகங்களின் ஊடாக பனை அபிவிருத்திச் சபையால் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டத்தில் ஆர்வமுள்ளவர்கள் பிரதேச செயலகங்களுக்கு விண்ணப்பித்து பனம் விதைகளைப் பெற்று நடுகை செய்ய முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## முல்லையில் 30 பாடசாலைகளில் நிரந்தர குடிதண்ணீர் வசதி இல்லை

பெற்றோர் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஜூலை 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் 30க்கு மேற்பட்ட பாடசாலைகளில் காணப்படுகின்ற குடிதண்ணீர் நெருக்கடிக்கு நிரந்தர தீர்வுகள் காணப்பட வேண்டும் என பெற்றோரால் தொடர்ச்சியாக கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

பாடசாலைகளின் நன்னீர் கிணறுகள் உவர் நீராக மாறியமை, கிணறுகளில் நீர் வற்றியமை போன்ற பல்வேறு காரணங்களால் வீடுகளில் இருந்தே கூடுதலான மாணவர்கள் குடிதண்ணீரை பாடசாலைகளுக்குக் கொண்டு செல்கின்றனர்.

வலயக் கல்விப் பணிமனைகளால் பாடசாலைகளில் பெற்றோர் மத்தியில் நடத்தப்படுகின்ற கூட்டங்களில் பாடசாலைகளில் நிலவுகின்ற குடிதண்ணீர் நெருக்கடிக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும் என நாம் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றோம்.

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் சில பாடசாலைகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் பல பாடசாலைகள் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் வறட்சியான காலங்களில் மாணவர்களுக்கு குடிதண்ணீரை விநியோகித்தாலும் எதிர்காலத்தில் பாடசாலைகளில் நிரந்தர குடிதண்ணீர்த் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்றனர். (ப-13)



## 3 லட்சத்தை நெருங்கியது தொற்றாளர் எண்ணிக்கை!

*1,688 பேர் நேற்று அடையாளம்*

கொழும்பு, ஜூலை 28

இலங்கையில் நேற்று 1,688 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 99 ஆயிரத்து 874ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த மேலும் 1,349 பேர் குணமடைந்து சிகிச்சை நிலையங்களிலிருந்து வெளியேறியுள்ளனர்.


இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 70 ஆயிரத்து 356ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

## மேலும் 48 பேர் உயிரிழப்பு 5 நாள்களில் 236 பேர் பலி

கொழும்பு, ஜூலை 28

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 48 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விபரம் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 195ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் உயிரிழந்த 48 பேரில் 28 ஆண்களும், 20 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்றால் நாட்டில் கடந்த 5 நாட்களில் 236 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)



## விறகு வெட்ட சென்றவர் மர்மப்பொருள் வெடித்து காயம்

முல்லைத்தீவு, ஜூலை 28

முல்லைத்தீவில் விறகு வெட்டச் சென்ற குடும்பத்தலைவர் மர்மப்பொருள் வெடித்து காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட மாத்தளன் சாலை பகுதியிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. மரமொன்றின் அடிப்பகுதியை வெட்டியபோது அதனுடன் கிடந்த மர்மப்பொருள் வெடித்துச் சிதறியுள்ளது. இதில் குறித்த நபர் கை மற்றும் தலைப் பகுதியில் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

கொழும்பு - யாழ்ப்பாண சொகுசு பஸ் சேவைக்கு நடத்துனர்கள் (உதவியாட்கள்) தேவை.

**076 00 9494 6**

## துயர் பகிர்கின்றோம்!

பிள்ளையாய் தாய்மடியில் 27 . 10 . 1932



பிள்ளையார் நிழலடியில் 26 . 07 . 2021

7ஆம் திருவிழா உபயகாரர் ஆனந்தராசா விமலாதேவி
அவர்களின் தாயாராகிய

### திருமதி இராசம்மா பேரம்பலம்

(5 ஆம் வட்டாரம் - மண்கும்பான்)

எமது ஆலயச் சூழலில் பூர்வீகமாய் வாழ்ந்து வந்தவரும், ஆலய உபய காரர்களாய் பல நற்கருமங்களைச் செய்பவர்களின் மூத்த வழித் தோன்றலு மாகிய இராசம்மா பேரம்பலம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல புற்றடியானை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை
மண்கும்பான் வெள்ளைப்புற்றடி,
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்.

## மரண அறிவித்தல்



### சோமசுந்தரம் இராசலட்சுமி

நவாலி வடக்கை பிறப்பிடமாகவும் மானிப்பாய் சந்தை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் இராசலட்சுமி நேற்று (27.07.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற நாகேசர் பொன்னம்மா தம்பதியினரின் பாசமிகு புதல்வியும் காலஞ்சென்றவர்களான செல்லையா நாகம்மா தம்பதியினரின் மருமகளும் காலஞ் சென்ற சோமசுந்தரத்தின் பாசமிகு மனைவியும் ஜெயந்தியின் (வேலணை) பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பாலசுப்பிர மணியம் மற்றும் கணேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2021) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

077 742 7495
077 833 6651

தகவல் :
குடும்பத்தினர்

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்....

### மயங்கி....

டிருக்கும்போது மயங்கி விழுந்த முதியவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் மட்டுவில் தெற்குப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்றது. மட்டுவில் தெற்கைச் சேர்ந்த ஆறுமுகம் ஜீவானந்தம் (வயது 67) என்பவரே உயிரிழந்தவர். சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)

### விபத்தில்...

நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டஇளைஞன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் பளை வேம்பொடுகேணியில் இடம்பெற்றது.

குறித்த பகுதியைச் சேர்ந்த சிவானந்தம் நிரோசன் (வயது 21) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பேரனின் (தாயாரின் தந்தை) வீட்டுக்கிருத்திய நிகழ்வில் பங்குபற்றிவிட்டு சென்ற வேளையில் மின்கம்பத்துடன் மோதி காயமடைந்துள்ளார். மறுநாள் காலையிலேயே அந்தப் பகுதியால் சென்ற பெண்ணொருவரால் அவதானிக்கப்பட்டு அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டபோதிலும் சிகிச்சை பயனளிக்காமல் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். (ம-9)

## வேலைக்கு ஆட்கள் தேவை

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு பொதியிடற் பிரிவில் ( Packing Section ) பணிபுரியத்தக்க ஆண், பெண் வேலையாட்கள் தேவைப் படுகின்றது.

**முன்னனுபவம் இருத்தல் வரவேற்கத்தக்கது.**

**தொடர்பு : 077 144 5701**

## CHEMISTRY ZOOM CLASSES

- Atomic Structure (2023) (04.08.2021)
- Inorganic Chemistry / Energetics (2022) (05.08.2021)
- Revision Class 2021 (02.08.2021)

**Teacher : A. NOEL**

**Contact No : 075 208 9154**

## துயர் பகிர்வு

சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்
( பெரிய தம்பிரான் )
ஆலய வளர்ச்சித் திருப்பணிகளில் பங்காற்றிய

### அமரர் கந்தையா இராசரத்தினம்



இகமதில் 18-10-1938

பரமதில் 26-07-2021

வையகத்தில் 82 அகவைகள் கடந்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தில் வைக்கப்பெற்ற அமரர் அவர்களின் ஆத்மா பெரியதம்பிரான் பாதார விந்தங்களில் சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

சுழிபுரம் - ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில்
பரிபாலன சபையினரும் முருகன் அடியார்களும்.

## வவுனியாவில் இன்று தடுப்பூசி ஏற்றப்படும்!

வவுனியா, ஜூலை 28

வவுனியாவில் கொரோனா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இன்றையதினம் முன்னெடுக்கப்படவுள்ளது. அந்தவகையில் வவுனியா பட்டாணிச்சூர் கிராமசேவகர் பிரிவிலும், தாண்டிக்குளம் கிராமசேவகர் பிரிவிலும் உள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இன்று தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன. இதேவேளை வவுனியாவை சேர்ந்த ஆசிரியர்களுக்கும் இன்று தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளன. வவுனியா சைவப்பிரகாசா மகளிர் பாடசாலை, மற்றும் தமிழ் மத்தியமகாவித்தியாலயம் ஆகியநிலையங்களில் அவர்களுக்கான தடுப்பூசிகளை ஏற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம-110)

## பெண் பணியாளர் தேவை

யாழில் இயங்கும் (மனோகரா தியேட்டர் அருகில்) புத்தக, போட்டோ கொப்பி கடைக்கு பெண் பணியாளர் தேவை.

**தொடர்பு : 076 832 3682**

## வேலையாட்கள் தேவை

முறுகண்டியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு மனேஜர், வெயிட்டர், காசாளர், சுத்திகரிப்பாளர், சமையல் வேலை தெரிந்தவர்கள், உதவியாட்கள் உடன் தேவை.

( ஆண், பெண் ) இருபாலாரும்

தொடர்புகளுக்கு :
**076 935 4332**

## பெயர் மாற்றம்

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயில் வசிக்கும் **தர்மலிங்கம் நினுஜன்** ஆகிய எனது பெயரை **தர்மலிங்கம் றினுஜன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **தர்மலிங்கம் றினுஜன்** என்றே கையெப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்

**தர்மலிங்கம் றினுஜன்**

LINGAA
3rd Anniversary
28.07.2021



Mega Offer
Sarees &
Fancy Jewellery
From 30% to
50% OFF*

லிங்கா பெஷன்
நல்லூரில் ஆடைகளின் சாம்ராஜ்யம்

Offer Valid From 28/07/2021 to 05/08/2021
WhatsApp - 0766440722 www.lingaa.lk
Tel - 0212214999 www.fb.com/lingaa.lk
NO 302A, TEMPLE ROAD, NALLUR, JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி சரோஜினிதேவி பொன்னுத்துரை

நேற்று (27-07-2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த **திருமதி சரோஜினிதேவி பொன்னுத்துரை** அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**நதியர் நகைமாடம், அலங்கார் நகை மாளிகை, ஸ்ரீ சுதனா நகை மாளிகை, ஸ்ரீ வாணி நகைமாடம்.**

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 13.09.1942 — விண்ணில் 08.08.2020

## அமரர் ஆறுமுகம் சுந்தரலிங்கம்

(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)

**திதி : ஆடி அபரபக்க பஞ்சமி (28.07.2021)**

ஒருயிரும் ஈருடலுமாய் வாழ்ந்து வந்தோம்
நீவீர் எம்மை விட்டுப் பிரிந்து தனிமரமாக்கிவிட்டீர்
உங்களிடம் வந்தோரை வாழ வைத்த தெய்வமானீர்கள்
எம்முடன் வாழ்ந்த உங்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

TORANTO CANADA — குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 06 . 1946 — மறைவு 27 . 07 . 2021

## திரு. சின்னத்தம்பி செல்வரட்ணம்

உடுவில் தெற்கு யாமாச்சந்தியை பிறப்பிடமடாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **சின்னத்தம்பி செல்வரட்ணம்** அவர்கள் நேற்று (27.07.2021) செவ்வாய்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் இளைய மகனும் காலஞ்சென்ற செல்லையா செல்லமுத்து தம்பதியினரின் மருமகனும் பத்மாவதியின் அன்புக்கணவரும். கிருபாகரன் (saba imbex colombo ),பகீரதி ,வேணுகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சபேசன் ,தர்மினி, தினேஸ் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற கனகசுந்தரம் . நடராசா, நாகேஸ்வரி மற்றும் அருமைத்துரை காலஞ்சென்ற இரத்தினசிங்கம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற நடராசா, சரஸ்வதி, மாணிக்கம் மற்றும் கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும் ஹரிஸ், தெய்வீகா, அபிஷேகா, பவித்திரா, நிவேதன், கேஷவி, சோபியா, தனுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (28-07-2021) புதன்கிழமை சுகாதார நடைமுறையின் கீழ் கோம்பன்மணல் இந்து மயானத்தில் காலை 9.30 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மனைவி - 077 132 3024**
**மகள் - 077 143 5240**
**மகன் - 0777 360 534**

**தகவல் : குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 12 . 1961 — மறைவு 27 . 07 . 2021

## திருமதி சுந்தரலிங்கம் வசந்தலலிதா

நல்லூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி சுந்தரலிங்கம் வசந்தலலிதா** அவர்கள் நேற்று (27-07-2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் கேதாராஈஸ்வரி தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான கனகு - நல்லம்மா தம்பதியினரின் மருமகளும் சுந்தரலிங்கத்தின் (மலயான் சலூன் உரிமையாளர், கஸ்தூரியார் வீதி) பாசமிகு மனைவியும் விஜயகாந்த் (அவுஸ்திரேலியா), ரூபா, நரேஸ், பிரதீசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரமேஸ், அஞ்சனா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமியாரும் சுரேஸ், ரோமலதா (கனடா) ஆகியோரின் சகோதரியும் கவிசனா, கவிநாத், ஆரியான் ஆகியோரின் ப்பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-07-2021) புதன்கிழமை பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும்

**201/3 பருத்தித்துறை வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் : குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை


யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு **மேசன் ஒப்பந்தகாரர்** மற்றும் **நாட்கூலி மேசன்** தேவை.
தொடர்பு: 076 316 5734

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் வீட்டில் தங்கி இருந்து வேலை செய்ய பெண் வேலையாள் தேவை.
தொடர்பு 077 998 8066


## மரண அறிவித்தல்

### நித்தியானந்தம் பரராஜசிங்கம் (பரா)



சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட **நித்தியானந்தன் பரராஜசிங்கம் (பரா)** நேற்று (27-07-2021) செவ்வாய்க்கிழமை சுவிற்ஸர்லாந்தில் காலமானார்.

அன்னார் நித்தியானந்தம் காலஞ்சென்ற அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தவமலர் தம்பதியினரின் அன்பு மருமகனும் நந்தினியின் அன்புக் கணவரும் நிருத்திகாவின் அன்புத் தந்தையும் நந்தினி. மாலினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுசிந்திரன். சிவஜீவன் ஆகியோரின் மைத்துனரும் சிவரதிகனின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிற்ஸர் லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை. அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அன்னவாசா'
சண்டிலிப்பாய்

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சற்குணலீலாவதி இராசரத்தினம்



யாழ். கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும். இணுவிலை வதிவிடமாகவும் கொண்ட சற்குண லீலாவதி இராசரத்தினம் அவர்கள் 26-07-2021 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார். காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி யோகம்மா தம்பதிகளின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான தம்பிஜயா தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் ,காலஞ் சென்ற இராசரத்தினம் (சின்னராசா) அவர்களின் அன்பு மனைவியும்.

தமிழ்ச்செல்வி. அன்பரசி. தயாநிதி (பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்). இராஜசேகரன். திருக் குமரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும். மகேஸ்வரன் (ஓய்வுநிலை உப அதிபர். யாழ் இந்துக்கல்லூரி) சறோஜினிதேவி. காலஞ்சென்றவர்களான லட்சுமிதேவி. சந்திராதேவி மற்றும் சகுந்தலாதேவி. ஜெமிலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும். ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்**

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"தமிழகம்"
இணுவில் தெற்கு

தகவல் :
குடும்பத்தினர்
077 9672 700

## மரண அறிவித்தல்



### திருமதி சரோஜினிதேவி பொன்னுத்துரை

யாழ் உடுவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூரிலும், தற்போது கொழும்பு - 15 (மோதர) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி பொன்னுத்துரை அவர்கள் நேற்று (27.07.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.R. ராஜதுரை தில்லையம்மா தம்பதிகளின் புதல்வியும், மறைந்த திரு. நாகமணி பொன்னுத்துரை அவர்களின் மனைவியும், திரு.S.P றொமேஷ் தம்பதிகளின் அன்புத் தாயாரும், திருமதி ஷாமினி றொமேஷ் அவர்களின் மாமியாரும், ஆகாஷ் (Australia), ஆதேஸ் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், மறைந்த திரு. R. ஜெகநாதன், திருமதி ஜெகதாம்பாள் (ராசாத்தி) சிவப்பிரகாசம், திரு.R. பத்மநாதன், திரு.R.கணநாதன், திரு.R.சபாநாதன், திரு.R.ரவீந்திரநாதன், திருமதி பத்மாவதி துரைச்சாமி, திரு.R ராஜநாதன் மற்றும் திரு.R.தில்லைநாதன், திரு.R. யோகநாதன் அவர்களின் அன்பு சகோதரியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 321 3450
077 778 0099

தகவல்
திரு.S.P றொமேஷ் (மகன்)
Asian Computer Education

# வெள்ளத்தில் மூழ்கின கர்நாடகா கிராமங்கள்

புதுடில்லி, ஜுலை 28

மகாராஷ்டிராவில் தென்மேற்கு பருவமழை தீவிரம டைந்துள்ள நிலையில் வட கர்நாடகாவிலுள்ள பெரும்பாலான கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

வட கர்நாடகாவிலுள்ள யாதகிரி, ஹாவேரி, பாகல்கோட்டை, பெலகாவி உள்ளிட்ட மாவட்டங்களில் தொடர்ச்சியாக கனமழை பெய்து வருகிறது. அதனால் கிருஷ்ணா, வேதகங்கா, துத்கங்கா உள்ளிட்ட ஆறுகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக் அவற்றின் கரையோரத்திலுள்ள கர்ஜகி, யாதஹள்ளி, கும்பாரஹள்ளி உள்ளிட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. (எ-இ)



# பாரம்பரியச் சின்னமாக மாறிய ராமப்பா கோயில்

புதுடில்லி, ஜுலை 28

இந்தியாவில் புதுடில்லி தெலுங்கானா மாநிலத்தில் உள்ள ராமப்பா கோவிலை, 'யுனெஸ்கோ' எனப்படும் ஐக்கிய நாடுகள் சபையின், கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு மையம், உலக பாரம்பரிய சின்னமாக அறிவித்துள்ளது.



தெலுங்கானாவின் வாரங்கல் மாவட்டம், பாலம்பேட்டில் தொன்மை வாய்ந்த ராமப்பா கோவில் உள்ளது.

காகதிய வம்ச மன்னர்களால், 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்த கோவில் சிற்ப வேலைப்பாடுகளுக்கு சிறப்பு பெற்றது. இந்த கோவிலை உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது. இது பற்றி இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளதாவது: ராமப்பா கோவிலை உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது. இதற்காக தெலுங்கானா மாநில அரசுக்கும், மக்களுக்கும் பாராட்டு தெரிவிக்கிறேன். இந்த கோவிலுக்கு அனைவரும் சென்று ராமப்பாவை வழிபடுவதுடன், கோவிலில் உள்ள சிற்ப வேலைப்பாடுகளையும் பார்த்து ரசிக்க வேண்டும் என்றார். (எ-இ)

## விழிநீர்க் காணிக்கை



### திரு. பொ. தர்மலிங்கம்

(ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாக சபைத் தலைவர்)

பட்டென செய்தி ஒன்று சட்டென
வந்து எம் காதுகளில் விழுந்தது
கதிகலங்கி நின்றோம்
உண்மையா பொய்யா என...
பரிதவித்து துடித்தோம்
காற்றெனவே வந்த விதி
கடிதினிலே பிரிந்ததனால்.!
என்றும் மறையாது உம் நினைவு
எம் உள்ளத்தில்...

அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மண் மகிழ
12-10-1937

கண் நெகிழ
26-07-2021

பிரிவால் துயரும்
ஊரெழு மடத்துவாசல் சுந்தரபுரி அருள்மிகு
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் நிர்வாகசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெ....

குளோபல் ரைம்ஸ்' இணையத்தள அறிக்கை ஒன்றை மேற்கோள்காட்டி, சீனத் தூதரகம் வெளியிட்டுள்ள ருவிட்டர் செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'ஐக்கிய அமெரிக்கா அதன் ஒருதலைப்பட்ச தடைகள் மூலம் ஏனைய நாடுகளின் உள்ளக விவகாரங்களில் தாக்கம் செலுத்துகின்றது' என சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.
இலங்கை, இந்தியா, சீனா உட்பட 27 நாடுகள் அமெரிக்காவின் தடைப் பட்டியலில் இருக்கின்றன எனவும் சீனத் தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.
ரஷ்யாவிடம் இருந்து எஸ்400 எனும் ஏவுகணைத் தொகுதியைக் கொள்வனவு செய்ததால், இந்தியாவும் அமெரிக்காவின் தடைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது எனவும் இலங்கைக்கான சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

## கொரோனாவால்...

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த உடுவிலைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவரே உயிரிழந்தவராவார். (ம-26)

## யாழ்ப்பாணத்தில்...

துக்கு 3 லட்சத்து 75 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைத்துள்ளன. அவற்றை 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும், 18 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்களுக்கும், முன்களப் பணியாளர்களுக்கும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:
தற்போது 3ஆம் கட்டமாக யாழ்ப்பாணத்துக்கு இரண்டு லட்சம் தடுப்பூசிகள் கிடைக்கின்றன. இந்தத் தடுப்பூசிகளை இதுவரை தடுப்பூசி பெறாத 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்களுக்கும், முன்களப் பணியாளர்களுக்கும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
முதல் நாள் ஜுலை 29ஆம் திகதி வியாழக்கிழமை 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் பாடசாலை ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட உள்ளது.
யாழ்ப்பாண மாவட்டத்தில் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கும், யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும், ஏனைய மாகாணங்களிலும் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கும் அவர்களது வதிவிடம் அமைந்துள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தடுப்பூசிகள் வழங்கப்படும். இவர்கள் தமது ஆசிரியப் பணியை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பித்து தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
முன்களப் பணியாளர்களுக்கான தடுப்பூசியானது ஜுலை 30ஆம் திகதி முதல் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
முன்களப் பணியாளர்கள் தமது பிரிவுக்குரிய சுகாதார மருத்துவ அதிகாரியை தொடர்புகொண்டு தமக்கான தடுப்பூசி வழங்கும் நேரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும்.
18 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட தினத்தில் தடுப்பூசி வழங்கப்படும். இந்தத் தடுப்பூசி ஏற்றப்படும் தினம் பற்றிய விபரங்கள் அந்தப் பிரதேசத்துக்குரிய சுகாதார மருத்துவ அதிகாரிகள் மூலம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அறியத்தரப்படும்.
தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும், தெல்லிப்பழை, பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைகளிலும் ஜுலை மாதம் 31ஆம் திகதி மற்றும் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி சனிக்கிழமைகளில் காலை 8 மணி முதல் தடுப்பூசி வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள் ளன.
அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தமது பிரதேசத்துக்குரிய சுகாதார மருத்துவ அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகளில் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியைப் பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும்.
தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்கு அழைத்துவர முடியாத நிலையில் படுக்கையில் உள்ள நோயாளர்களுக்கு அவர்களது வீடுகளுக்கே சென்று தடுப்பூசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நோயளர்களின் விபரங்களை அவர்களை பராமரிப்பவர்கள் அப்பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.
இவர்களுக்கான தடுப்பூசியானது தடுப்பூசி வழங்கும் திட்டத்தின் இறுதி நாள்களில் வீடுகளுக்குச் சென்று வழங்கப்படும் - என்றுள்ளது. (ம-26)

## வட்டுவாகல்....

ரிப்பை முறியடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
முல்லைத்தீவில் கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ள காணியில் நில அளவை மேற்கொண்டு அதை அபகரிப்பதற்காக காணி உரிமையாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். கொரோனாவை ஒருபக்கத்தில் காரணம்காட்டி மறுபக்கத்தில் இந்த அபகரிப்பு முயற்சிகள் இடம்பெறுகின்றன. எனவே இந்த அபகரிப்பைத் தடுத்துநிறுத்த தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் முன்வர வேண்டும். இலங்கையிலும் வடக்கு மாகாணத்திலும் சீன ஆக்கிரமிப்பும் இராணுவ மயமாக்கலும் தீவிரமாக அதிகரித்து வருகின்றது.
யாழ் மாவட்ட செயலகம் முன்பாக உள்ள பழைய கச்சேரி கட்டடத்தை விற்பனைசெய்ய முயற்சிகள் இடம்பெறுகின்றன. குருந்தூர்மலை, வெடுக்குநாறி மலை ஆகிய இடங்களில் விகாரைகள் உள்ளன எனக்கூறி பல ஏக்கர் நிலப்பரப்புக்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. வாகரையிலும் 500 ஏக்கருக்கு மேல் கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. குச்சவெளி பிரதேசத்தில் பிக்கு ஒருவரால் பெருமளவு நிலப்பரப்பு அபகரிக்கப்பட்டுள்ளது.
தீவகத்தில் இந்தியா காற்றாலை மூலமும் சூரிய மின்கலத்தின் மூலமும் இலவசமாக மின்னுற்பத்தியை மேற்கொள்ள முன்வந்தது. ஆனால் அதற்கு அனுமதி வழங்காமல் சீனாவின் கடன் திட்டத்தில் சில அபிவிருத்திகளை மேற்கொள்ள அரசு முயல்கின்றது. அத்துடன் தற்போது சிங்களவர் ஒருவரை வடமாகாணத்தின் பிரதம செயலாளராக நியமித்துள்ளனர். இது மாகாணத்துக்கு இருக்கின்ற அதிகாரத்தை பறிக்கும் நடவடிக்கையே - என்றார். (ம-26)

## யாழ்....

இணைந்து இந்த முடிவை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் எடுத்துள்ளது. அத்துடன் நண்பகல் 11 மணிக்கு சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக கவனவீர்ப்புப் போராட்டத்தையும் பல்கலைக் கழக முன்றலில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் முன்னெடுக்கவுள்ளது. (ம)

## ஹிஷாலினிக்கு...

இடம்பெற்றது. தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், மாற்றத்திற்கான மாவட்ட இளைஞர் பேரவை, பூந்தளிர் மாவட்ட பெண்கள் அமைப்பு மற்றும் வடமராட்சி கிழக்கு பிரஜைகள் குழு உள்ளிட்ட அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.
குறித்த போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-319)

## அதிபர்...

முடிவு எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின்னர் எடுக்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச வாக்குறுதியளித்துள்ளார். அதிபர்கள், ஆசிரியர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று அலரி மாளிகையில் நடத்திய கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அதன்படி, அடுத்த திங்கட்கிழமை முதல் பணிக்குத் திரும்பத் தயாராக இருப்பதாக அதிபர்கள், ஆசிரியர்கள் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ம-22)

## தொழிற்சங்க...

கொழும்பு, ஜுலை 28
அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட கோரிக்கைகளுக்கான இறுதி முடிவு எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின்னர் எடுக்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச வாக்குறுதி வழங்கிய போதிலும், தமது தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.
அதிபர்கள், ஆசிரியர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று அலரி மாளிகையில் பிரதமர் சந்திப்பை நடத்தினார். அதில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் காரணமாக இணையவழிக் கற்பித்தலில் இருந்து விலகுவதற்கான தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்கள் முடிவு செய்துள்ளன என்று ஸ்டாலின் மேலும் தெரிவித்தார். (ம-22)

## கிணற்றுக்குள்...

றஞ்சன் பிரதீபன் (வயது 31), பிரதீபன் மாலினி (வயது 27) ஆகியோரே சடலமாக மீட்கப்பட்டவர்கள். நேற்றுமுன்தினம் மாலை அவர்கள் கிணற்றுக்குள் வீழ்ந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. குறித்த இருவரும் திருமணம் செய்து 10 மாதங்களில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## அன்டிஜென்...

சட்டத்தின் கீழ் கட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு நேற்று முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜென் பரிசோதனையில் 11 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
395 பேரிடம் முன்னேடுக்கப்பட்ட பரிசோதனையிலேயே 11 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் மீன்சந்தை வியாபாரிகள் இருவர், முச்சக்கர வண்டி சாரதிகள் இருவர், தனியார் பேருந்து சேவை ஊழியர் ஒருவர், வெதுப்பகம், வர்த்தக நிலையம் ஆகியவற்றின் ஊழியர்கள் தலா ஒருவர் மற்றும் மீனவ சங்கப் பிரதி ஒருவர் அடங்குகின்றனர்.
பருத்தித்துறை நகரை அண்டிய மருந்தகங்கள் உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் வங்கிகள் திறக்கப்படுகின்றன. பருத்தித்துறை நகரில் இருந்த பேருந்து தரிப்பிடம் மூடப்பட்டுள்ளதால் டிப்போ சந்தியிலிருந்து பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

## உலகில்....

கின் மிகப்பெரிய நீல இரத்தினக்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
510 கிலோகிராம் எடையுள்ள இது சுமார் 2.5 மில்லியன் கரட் கொண்டது என மதிப்பிடப்பட்டுள்ளது, மேலும், இது 'செரண்டிபிட்டி சபையர்' என்று அழைக்கப்படுகின்றது.
தேசிய நகை மற்றும் இரத்தினக்கற்கள் அதிகார சபையின் இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்திடம் விசாரித்தபோது, அது குருவிந்த ரகத்தைச் சேர்ந்த அருணுல் இரத்தினங்களின் கொத்து என அடையாளம் காணப்பட்டது.
இரத்தினபுரி மாவட்டத்தில் வசிக்கும் ஒரு மாணிக்க வணிகரின் வீட்டின் தோட்டத்தில் கிணறு தோண்டியெடுக்கும் தொழிலாளர்களால் அது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கொத்து வெளிர் நீலமானது என்றும், சர்வதேச சந்தையில் சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புடையது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)


## தீயில்...

சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:
பருத்தித்துறை கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த யோகேஸ்வரன் பாலரஞ்சிதா (வயது 32) என்ற பெண் கடந்த 22ஆம் திகதி மதியம் தேனீர் வைப்பதற்காக அடுப்பைப் பற்றவைத்துவிட்டு நெருப்புக் குச்சியை கீழே போட்டுள்ளார். அது கீழே இருந்த பெற்றோல் கொள்கலனில் வீழ்ந்ததை அடுத்து அந்தப் பெண் மீது தீ பரவியுள்ளது. இதையடுத்து அவர் தீயை அணைப்பதற்காக கிணற்றுக்குள் குதித்துள்ளார். இதையடுத்து அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். எனினும் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று அவர் உயிரிழந்தார். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்னல் பாண்டியாவுக்கு கொரோனா தொற்றுறுதி!

## இரண்டாவது ரி20 பிற்போடப்பட்டது



**கொழும்பு, ஜூலை 28**

**இந்திய அணியின் சகலதுறை வீரர் குர்னல் பாண்டியாவுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து நேற்று இரவு நடைபெறவிருந்த இந்தியா , இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ரி20 ஆட்டம் இன்று இரவுக்குப் பிற்போடப்பட்டது.**

சர்வதேச கிரிக்கெட் சபையின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னர் இரு அணிகளின் வீரர்களுக்கும் கொரோனா பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றது.

இதன்படி இலங்கை இந்திய வீரர்களுக்கு இரண்டாவது ரி20 ஆட்டத்தை முன்னிட்டு மேற்கொண்ட பி.சி.ஆர். சோதனையில் குர்னல் பாண்டியாவுக்குக் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து நேற்று இரவு நடைபெறவிருந்த இரண்டாவது ரி20 ஆட்டம் இன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இரு அணிகளின் வீரர்களிடம் இருந்தும் பெறப்பட்ட மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தி அதில் கிடைக்கும் முடிவுகளின் அடிப்படையிலேயே இரண்டாவது ரி20 ஆட்டம் தொடர்பான உறுதிப்பாட்டுக்கு வரமுடியும். (ம)

# பிருத்வி, சூர்யக்குமார் இருவருக்கும் சிக்கல்!

லண்டன், ஜூலை 28

இந்திய அணியின் வீரர்களான சூர்யக்குமார், பிருத்வி ஷா இருவரும் இங்கிலாந்தில் முகாமிட்டுள்ள முதன்மை அணியுடன் இணையும்போது தம்மைத் தனிமைப்படுத்த வேண்டிய நிலை ஏற்படலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்திய அணி தவான் தலைமையில் இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இந்தத் தொடரில் சூர்யக்குமார் யாதவ் மற்றும் பிருத்வி ஷா இருவரும் சிறப்பாக விளையாடி வருகின்றனர். அதேநேரம் கோலி தலைமையில் இந்திய முதன்மை அணி இங்கிலாந்தில் தங்கியுள்ளது. இவர்கள் இங்கிலாந்தை எதிர்த்து 5 ஆட்டங்கள் கொண்ட நீண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளனர். இந்தத் தொடரில் இடம்பிடித்திருந்த ஆரம்ப வீரர் கில் மற்றும் சுழற்பந்துவீச்சாளர் சுந்தர் இருவரும் காயமடைந்துள்ள நிலையில் அவர்களுக்குப் பதிலாக எவரை அணிக்குள் எடுப்பது என்பது தொடர்பில் இந்திய கிரிக்கெட் சபையின் தெரிவுக்குழு அறிவித்துள்ளது. இதன்படி சூர்யக்குமார் மற்றும் பிருத்வி ஷா இருவரும் அணிக்குள் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் கொழும்பில் 'பயோ பபுள்' வளையத்துக்குள் இருப்பதால் 'பயோ பபுள்' முறையில் இங்கிலாந்துக்குச் செல்லவுள்ளனர். அங்கு இவர்கள் தம்மைத் தனிமைப்படுத்தத் தேவையில்லை. சாதாரண பி.சி.ஆர். சோதனையை மேற்கொண்டாலே போதுமானது என்று முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இலங்கையில் உள்ள இந்திய அணியில் இடம்பிடித்திருந்த குருனல் பாண்டியா கொரோனாவால் பாதிக்கப்பட்டதை அடுத்து பிருத்வி, சூர்யக்குமார் இருவரும் இங்கிலாந்தில் அந்த நாட்டுச் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப தம்மைத் தனிமைப்படுத்த வேண்டி ஏற்படலாம் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. (ம)

வேலையாட்கள் தேவை

பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு

* பத்திரிகை மடிப்பவர்கள்
* விநியோகிப்பவர்கள் தேவை.

தொடர்பு : 077 120 9989



முன்னாள் அணித்தலைவர் ராமோஸ் உட்பட பல வீரர்களை வெளியேற்றி, ரியல் மட்ரிட் அணி புதிதாகக் கட்டமைக்கப்பட்டுள்ள நிலையில், இந்தப் பருவகாலத்துக்கான அந்த அணியின் பயிற்சி முகாம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. (ம)

# மே.தீவு - பாகிஸ்தான் ரி20 தொடர் ஆரம்பம்!



ஜமைக்கா, ஜூலை 28

மேற்கிந்தியத் தீவுகள் பாகிஸ்தான் இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட ரி20 தொடர் இன்று ஆரம்பமாகின்றது.

இரு அணிகளுக்கும் இடையில் ஏற்கனவே நடைபெறத் திட்டமிட்டு கொரோனா காரணமாகக் கைவிடப்பட்ட தொடரே இன்று ஆரம்பமாகின்றது.

இதன்படி நான்கு ரி20 ஆட்டங்களும் முறையே இன்றும், எதிர்வரும் 31ஆம் திகதியும், ஓகஸ்ட் முதலாம் திகதியும், ஓகஸ்ட் 3ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. (ம)

மரண அறிவித்தல்




திரு. பொன்னம்பலம் தர்மலிங்கம்

( தலைவர் - ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாக சபை )

ஊரெழு கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பொன்னம்பலம் தர்மலிங்கம் கடந்த (26-07-2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வீரசிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகேஸ்வரி (பச்சைமணி) அவர்களின் அன்புக் கணவரும் நளாயினி (லண்டன்), பிரசன்னா (SZAI FITNESS உரிமையாளர்), திருமாறன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சுஜீவன் (லண்டன்), கஜநிதி ஆகியோரின் அன்பு மாமனாரும் அக்ஷிகா (லண்டன்), அபினாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-07-2021) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரெழு - பொக்கணை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரசன்னா - 077 123 0099
நளாயினி - +44 741 740 4452

தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28. 07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.